# வருடாந்த அறிக்கை 2014

இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை

## தலைவரின் செய்தி–வருடாந்த அறிக்கை 2014



எமது நாகரீகம் என்பது, பல மாற்றங்களுக்குள்ளாகி, பல யுகங்களைக் கடந்து வந்த ஒரு பயணத்தின் பிரதிபலனாகும். இன்றைய நாகரீகம் கனிய எண்ணெய்களில் பெரிதும் தங்கியிருக்கின்ற ஒரு அம்சம் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். பிறந்துள்ள இந்த நூற்றாண்டினுள் உலக சனத்தொகை 800 கோடியையும் தாண்டிச் செல்வதற்கான வாய்ப்பிருக்கின்றது. இந்த சனத்தொகையில் ஏறக்குறைய 200கோடி மக்கள் இன்னும் இந்த சக்தியை அடிப்படையாகக் கொண்ட நாகரீகத்தினால் காவுகொள்ளப்படாவிட்டாலும், அந்த மக்களுக்கு ஏனையவர்கள் போல் தமது வாழ்க்கைப் பாணியை இலகுபடுத்திற்கொள்ளும் நிமித்தம்இன்னும் தேவையான சக்தி சார்ந்த சேவைகள் கிடைக்கவில்லை.

அதனடிப்படையில் பார்க்கின்ற போது, இன்று மனிதன் முகம்கொடுத்துள்ள பிரதான அச்சுறுத்தல் என்ன என வினவினால், அதற்கு பல பதில் கிடைக்கும். பிரிவினவாதம், மதவாதம், யுத்தம், மின்சக்தி, மற்றும் ஏனைய வளங்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்துள்ள பிரச்சினை இன்று தெட்டத் தெளிவாகக் காணப்படுகின்றது. எவ்வாறாயினும், நேடியாக கற்புலனாகத, நிச்சயம் எங்களுக்கு வரக்கூடிய பாரியதொரு அச்சுறுத்தல் யாதெனில் மனித வர்க்கம் புவியிலிருந்து அற்றுப்போகும் அபாயமாகும். எமது மானிட வர்க்கம் புவியில் ஏற்படுத்தியுள்ள தாக்கத்தின் அளவு எவ்வளவு எனப் புரிந்துகொள்ளும் போதுதான் உலகத்தில் சனத்தொகை 700 கோடியையும் தாண்டியிருந்தது.

இத்தகையதொரு சனத்தொகைக்குத் தேவையான வளங்கள் போதியளவில் புவியில் காணப்படுகின்றனவா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. இவ்வாறு அதிகளவில் எமது உலக வளங்கள் வரலாற்றில் நிகழாத அளவுக்கு பயன்படுத்தப்படுகின்றன. குறிப்பாக புவியை அகழ்ந்து பெறப்படும் கனிய எண்ணெய், நிலக்கரி, இயற்கை எரிவாயு வளம்என்பன சக்தி உற்பத்தியில் ஈடுபடுபடுத்தப்படுவதால் எழுந்துள்ள அதிவிஷேட பிரச்சினை யாதெனில் வளிமண்டல வெப்பநிலை அதிகரிப்பதாகும். இவற்றினுள் மனிதனுக்கு தீங்குவிளைவிக்கும் ஈக்கள், நுளம்புகள், கரப்பத்தான் போன்ற பூச்சிகள் சுற்றாடலில் அதிகரிக்கின்றன. ஆகையால், தாங்க முடியாத வெப்பத்தினால் மனித வர்க்கம் அரிதாகிச்செல்லும் நிலை தோன்றியுள்ளது.

இந்தப் பின்னணியினுள் துரிதமாக தேய்ந்து வரும் கனிய எண்ணெய் வளங்கள், அதே போன்று அந்தக் கனிய வளங்களுக்கு அதிகரித்து வரும் கேள்விகள் மற்றும் கனிய எண்ணெய்களின் தகனத்தினால் ஏற்பட்டுள்ள சுற்றாடல் தாக்கங்கள் என்பவற்றின் காரணமாக எழுந்திருப்பது தீர்வுகாண முடியாத ஒரு பிரச்சினையாகும். இதற்கான தீர்வைக் காண வேண்டுமானால், தற்பொழுதுள்ள வரையறைகளுக்கு அப்பால் நிகழும் சூழ்நிலைகளில் தீர்வுகாண வேண்டுமென்பது பொருத்தம் என நம்புகின்றேன்.

ஆகையால், மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி மூலங்களைத் துரிதமாக அபிவிருத்தி செய்வதும், மின்சக்திப் பாவனையில்

வினைத்திறனை துரிதமாக அதிகரிப்பதும் இலங்கை போன்ற ஒரு நாட்டில் அதிகளவு கவனம் செலுத்த வேண்டிய இரண்டு பிரிவுகளாக விளங்குகின்றன. எனினும், இந்தத் தீர்வின் நிமித்தம் அதிகளவில் பங்களிப்பை நல்கக்கூடிய மூன்றாவது பிரிவு எமது கவனத்திலிருந்து தூரப்பட்டுள்ளது என்பதை இங்கு குறிப்பிட்டாக வேண்டும். இது எதுவனில், எமது மானிட வர்க்கத்தின் அதிக நுகர்வுப் பாணியை, உலகில் மிகவும் இரம்மியமான விதத்தில் மாற்றுவதாகும். இதன் போது நிலையான சக்தி பற்றிய அறிவு மைய ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்புவது இங்கு ஒரு முன்னுரிமைக் கருமமாக விளங்குகின்றது. இதன் அடிப்படையில், மின்சக்தியொன்றாக கனிய எண்ணெய்யை உபயோகிப்பதினுள் ஏற்படும் சுற்றாடல் ரீதியான தீமைகள், மின்சக்தியை சேமித்துப் பாதுகாப்பதன் முக்கியத்துவம் என்பன தொடர்பில் இளம் சமுதாயத்தை விழிப்பூட்டும் கரும பணியையும் ஏற்கெனவே நாம் ஆரம்பித்துள்ளோம்.

இன்று நிலவுகின்ற ஆபத்தான நிலைக்கு முகம்கொடுக்கும் நிமித்தம், இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபையின் பயணத்தினுள் மின்சக்திப் பாதுகாப்புடைய ஓர் இலங்கையைக் கட்டியெழுப்பும் வகையில் அணிதிரண்டு நின்ற மற்றும் நிற்கின்ற முகாமைத்துப் பதவியணி, பணிப்பாளர் நாயகம் மற்றும் அதிகார சபையின் ஊழியர்கள் முதலிய அனைவரையும் மதிப்புடன் நினைவுகூற விரும்புகின்றேன்.

பிரசாத் கல்ஹேன
**தலைவர்**
இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை

**பணிப்பாளர் நாயகத்தின் செய்தி – வருடாந்த அறிக்கை 2014**



இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை (இ.நி.வ.அ.ச.) 2007 ஆம் ஆண்டில் அதன் தொடக்கத்திலிருந்து, சக்திப் பாதுகாப்புடைய தேசம் எனும் செயற்பாடு சார்ந்த குறிக்கோளை அடையகொள்கை மற்றும் ஒழுங்குறுத்துகை அபிவிருத்திகளினூடாக தொடர்ந்தும் உந்தப்பட்டு வந்துள்ளது. இந்தப் பின்னணியைக் கொண்டு, 2014ஆம் ஆண்டானது இ.நி.வ.அ.ச. சபைக்கு கணிசமான முன்னேற்றமுடைய துல்லியமான ஒரு ஆண்டாகப் பிரதிபலித்தது. குறித்த ஆண்டு காலப்பகுதியில், செயல் சார் நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துவதில், எதிர்பார்த்த பலன்களை அடையும் பொறுப்பை உணர்ந்துசெயல்பட்ட தனியாட்கள், அக்கறையுடைய தரப்புகள் போன்ற சகல தரப்புகளிடமிருந்தும் கிடைத்த தொடர் ஆதரவை நினைக்கும் போது, அது எனக்கு பெரும் மகிழ்ச்சியைத் தருகின்றது.

இ.நி.வ.அ.ச. அதன் குறிக்கோளில் காணப்படுவது போல், அறிவு முகாமைத்துவத்தின் மூலம், சமூகத்தின் அனைத்துப் பிரிவுகளிலும், புதிய மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி, (மீ.பு.ச.) சக்தி வினைத்திறன் மேம்பாடு, மற்றும் பாதுகாப்பு ஆகிய இரண்டு முக்கிய பிரிவுகளினூடாக, நிலைபெறுதகு சக்தி அபிவிருத்தியை ஊக்குவிக்கும் வகையிலான முன்னோடி அரச நிறுவனமாக விளங்குகின்றது. கடந்த ஆண்டுகளின் போது, இந்தப் பிரிவுகளில், இ.நி.வ.அ.ச. சபையினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள், சக்தித் துறையின் சவால்களையும் அதே நேரம், சுற்றாடல் மீதான அதன் தாக்கங்களையும் எதிர்கொள்ளக்கூடிய விதத்தில் 2014 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஒருங்கிணைக்கப் பட்டு, செயற்படுத்தப்பட்ட செயற்பாடுகளினூடாக, நாட்டின் ஆற்றல் மேம்பாட்டிற்கு தொடர்ந்தும் பயனளித்தன.

கருத்திட்ட அபிவிருத்திற்கு முக்கியமான மேம்பாடுகளைச் செய்து, இரண்டு ஆண்டு காலம் நிறைவடைந்த பின்னர், திணித்தல் வரிக் கட்டணம் பிரகடனப் படுத்தப்பட்டது. இதனையடுத்து, 2014 ஆம் ஆண்டில், பு.மீ.ச. சக்தி சார்ந்த பிரிவினது அபிவிருத்தியில் இன்றியமையாத ஒரு திருப்புமுனை அடையப்பட்டது. 2014 ஆம் ஆண்டு காலப் பகுதியில், பதின்மூன்று சிறிய நீர்வலு மூல மின்னறப்பத்திப் பொறித்தொகுதிகளும், இரண்டு உயிரணுத்திணிவுச் சக்தி மூல மின்னுற்பத்தி பொறித்தொகுதிகளும் மற்றும் ஐந்து காற்று சக்தி மூல மின்னுற்பத்திக் கருத்திட்டங்களும் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டன. இவற்றின் மொத்த நிலையான கொள்திறன் முறையே 24.1 மெ.வொ, 7.0மெ.வொ. மற்றும் 50.0மெ.வொ. என்ற அளவுகளில் இருந்தன. இது மொத்தம் 437.4 மெ.வொ. பு.மீ.ச. கொள்திறனுக்கு வழிவகுத்தது. வருடாந்த மின்சக்தி உற்பத்தி 1,215.4ஜி.வொ.ம. என்ற அளவில் அல்லது க்றிட் மின்சார உற்பத்தி 9.5%என்ற அளவில் காணப்பட்டன. இதே நேரம், SPPசூரிய சக்தியில் சக்திக் கொள்திறன் சேர்வுகள் இல்லாதிருந்த போதிலும், தேறிய மாணிவாசிப்பு உயர்ந்த ஒரு வீதத்தில் தொடர்ச்சியாக அதிகரித்துச் சென்று,13.3மெ.வொ. நிலையான சக்தி கொள்திறனை அடைந்தது. இதில் 2014 ஆம் ஆண்டில் மாத்திரம் மொத்தமாக 1500 எண்ணிக்கைக்கும் அதிகமான மின்சார முறைமை மைய 10 மெ.வொ. சக்தி சேர்வு

காணப்பட்டது. சூரிய சக்தி தேறிய மாணிவாசிப்பு முறைமைகளின் வருடாந்த மின்னுற்பத்தி ஏறக்குறைய 18.6 ஜி.வொ.ம. என்ற அளவில் காணப்பட்டது. இது பு.மீ.ச. மூலத்திலிருந்து 10% வீத மின் சக்தி உற்பத்திக் கொள்கை இலக்கையும் மற்றும் 2015 ஆம் ஆண்டு எதிர்கால இலக்கையும் அடைவதற்குப் பங்களித்தது.

2014 ஆம் ஆண்டில், சகல முடிவுப் பயன் சக்தித் துறைகளிலும் தொடர்ச்சியான தேசிய சக்தி முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம் நாட்டின் பொருளாதாரத்தில் மீண்டுமொரு தடவை கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தியது. இது மொத்தம் 23.4 ஜி.வொ.ம. வருடாந்த மின்சக்தி சேமிப்புக்குப் பயனாக அமைந்தது. குறிப்பாக, வர்த்தக மற்றும் கைத்தொழில் தாபனங்களில் சக்தி/ சக்திக் கணக்காய்வு ஒழுங்குறுத்துகைகளின் ஊடாக எல்லாத் துறைகளிலும், தலையீட்டு நடவடிக்கைகளிலும் செயற்படுத்தப்பட்ட பரந்த வினைத்திறன் வாய்ந்த ஒளியேற்றல் பயன்பாடு பெரும் பங்களிப்பை செய்தது. மேலும், சமூகத்தில் பெருமளவிலான அறிவு முகாமைத்துவம், கருத்தரங்குகள் மைய நிகழ்ச்சி நிரல்கள், பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் வெகுஜன ஊடகப் பிராசார நடவடிக்கைகள் என்பன, சக்தி உணர்வுபூர்வ சமூகத்தை உருவாக்கப் பங்களிப்புச் செய்தன. உள்நாட்டு மற்றும் சர்வதேச வள நபர்களின் உதவியைக் கொண்டுநடத்தப்பட்ட சக்தி வினைத்திறனும் சுற்றாடல் ரீதியில் நிலைபெறுதகு போக்குவரத்து முறைமைகளும் (E3ST) என்ற தலைப்பிலான இரண்டு நாள் கருத்தரங்குப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் சக்தி முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டங்களின் மற்றொரு முக்கிய முயற்சி நடவடிக்கையாக விளங்கியது. இதனைக் கொண்டு, இ.நி.வ.அ.ச. குறிப்பாக இலகு வாகனங்களை இலக்காகக்கொண்டு, நிலத்திலோடும் வாகனங்களுக்கான எரிபொருள் சிக்கன நியமங்களைத் தயாரிக்கும் கரும பணியை முன்னெடுத்துள்ளது.

UNFCCCமற்றும் கியோட்டோ ப்ரொட்டகோல் ஆகியனவும் மற்றும் வித்தியாசமான கொள்கை முயற்சிகளும் காணப்படுகின்ற போதிலும் GHGபுகை வெளியீடுகள் கடந்த தசாப்தங்களாக கணிசமான அளவில் அதிகரித்துள்ளன அல்லது அந்த GHGபுகைவெளியீடுகளின் முக்கிய உந்திகள் பொருளாதார உற்பத்தி வெளியீடு, சனத்தொகை, அதிக புகை வெளியீடுகள் சக்தி வினைத்திறன் மேம்பாட்டிலிருந்து குறைவடைதல் முதலிய அம்சங்களில் அதிகரித்துள்ளன என2014ஆம் ஆண்டில் பிரசுரிக்கப்பட்ட 5-வது IPCCமதிப்பீட்டு அறிக்கை வெளிப்படுத்தியது. புகை வெளியீடுகளை அதிகளவில் குறைக்க வேண்டுமானால், அது வேறுபட்ட பிரிவுக் கொள்கைகள், நிறுவனங்கள், தொழில்நுட்பங்கள், மானிட நடத்தையில்/நுகர்வு மாதிரியில் மாற்றங்கள் போன்ற அம்சங்களைத் தேவைப்படுத்தும். குறிப்பாக, மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி வளங்களின் பாரியளவான பயன்பாடு மற்றும் சக்தி முடிவுப் பயன் துறைகளில் சக்திற்கான இறுதி தேவைக் குறைப்புகள் என்பன முக்கிய தீர்வுகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆதலால் சக்தித் துறையில் இ.நி.வ.அ.ச. பங்களிப்பானது எதிர்வரும் ஆண்டுகளில் மிகவும் இன்றியமையாததாக விளங்கும்.

கலாநிதி துஷித்த சுகதபால
**பணிப்பாளர் நாயகம்**

# எமது தூரநோக்கு

மின்சக்தி பாதுகாப்புடைய ஓர் இலங்கை என்பது எமது தூரநோக்காகும்.

# எமது செயற்பணி

அகழ்வு, ஆராய்ச்சி, வசதிகள் விநியோகம், ஆய்வுகள் மற்றும் அபிவிருத்தி மற்றும் அதே போன்று அறிவு முகாமைத்துவம் என்பவற்றினூடாக உள்நாட்டு சக்தி மூலங்களை அபிவிருத்தி செய்வதற்கும் மற்றும் சக்தி வளங்களை சேமிப்பதற்கும் மேற்கொள்ளப்படும் தேசிய முயற்சிக்கு வழிகாட்டுவதும், அதனூடாக இயற்கைவளங்கள், மனித வளங்கள் மற்றும் பொருளாதார வளங்கள் என்பவற்றைப் பாதுகாத்து இலங்கையின் மின்சக்திப் பாதுகாப்பை உறுதிசெய்வதற்கு வழிசமைத்தல் எமது செயற்பணியாகும்.



**முகாமைத்துவ சபையின் உறுப்பினர்கள் பற்றிய விபரம் - 2014**

**தலைவர்**
திரு பிரசாத் கம்லத்

**உறுப்பினர்கள்**

திருமதி தாரா விஜேதிலக்க
செயலாளர்
விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சு

திரு ஏ. அப்துல் மஜீட்
மேலதிகச் செயலாளர் (அபிவிருத்தி)
உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சு

திரு எம்.ஏ. தாஜுதீன்
மேலதிகச் செயலாளர்
கைத்தொழில், வர்த்தக அமைச்சு

திருமதி தனூஜா முருகேசன்
மேலதிகச் செயலாளர் (நிருவாகம்)
காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு

திரு ஏ.எல்.ஏ. அசோக்க சிறிவர்த்தன
மேலதிகச் செயலாளர் (நிருவாகம்)
கமத்தொழில் அமைச்சு

திருமதி குமாரி சோமரத்ன
மேலதிகச் செயலாளர் (நிருவாகம்)
பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சு

திரு காமினி கமகே
மேலதிகச் செயலாளர் (சுற்றாடல் கொள்கை)
சுற்றாடல், மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி அமைச்சு

திரு ஏ.எம்.டப்ளியூ. சரத்சந்திர
பணிப்பாளர் (கருத்திட்டம், தொழில்நுட்பம்)
போக்குவரத்து அமைச்சு

திரு தமித்த குமாரசிங்க
பணிப்பாளர் நாயகம்
இலங்கைப் பொதுப் பயன்பாடுகள்
ஆணைக்குழு

திரு அசோக்க சந்தீப விஜேசிங்க
பி.நி.அ./தலைவர்
ஒம்னிப்ரோ இன்டஸ்ட்ரீஸ் (ப்ரைவட்)
லிமிற்றட்

திரு ருவன் விராஜ் வைத்தியரத்ன
முகாமைப் பணிப்பாளர்
ஹேலீஸ் அட்வன்டிஸ் லிமிற்றட்

திரு அசோக்க அபேகுணவர்த்தன
நிறைவேற்றுப் பணிப்பாளர்
சக்திக் குழு

திரு சி. மஹேஸ் எதிரிசிங்க
சிரேஷ்ட விரிவுரையாளர்
கொழும்புப் பல்கலைக்கழகம்

திரு வினோத் சமரவிக்ரம
பணிப்பாளர் (விற்பனை)
எரிக்ஸன் ரெலி கொமினிகேஷன் லங்கா
(ப்ரைவட்) லிமிற்றட்

திரு ஆர்.எம்.டப்ளியூ. ரத்நாயக்க
மேலதிகச் செயலாளர் (தொழில்நுட்பம்)
போக்குவரத்து அமைச்சு

திரு ஜே.ஜி.எல்.எஸ். ஜயவர்த்தன
பணிப்பாளர்
மின்வலு சக்தி அமைச்சு

திரு எஸ்.எஸ். முதலிகே
பணிப்பாளர் (தேசிய திட்டமிடல் திணைக்களம்)
நிதி, திட்டமிடல் அமைச்சு

திரு டீ.டீ. ஆனந்த நாமல்
தலைவர்
இலங்கை சக்தி முகாமையாளர்கள் சங்கம்

திரு பாத்ய ரணதுங்க
தலைவர்–ஸ்மோல் ஹைட்ரோ பவர்
டிவலொப்பர்ஸ் அசோசியேஷன் இக்கோ பவர் (ப்ரைவட்) லிமிற்றட்

**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு உறுப்பினர்கள் பற்றிய விபரம் – 2014**

தலைவர்
**திரு எஸ்.எஸ். முதலிகே**
பணிப்பாளர் (தேசிய திட்டமிடல் திணைக்களம்)
நிதி, திட்டமிடல் அமைச்சு

உறுப்பினர்
**திரு காமினி கமகே**
மேலதிகச் செயலாளர் (சுற்றாடல் மற்றும் கொள்கை)
சுற்றாடல் மற்றும் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி அமைச்சு

உறுப்பினர்
**திரு ஆனந்த நாமல்**
பணிப்பாளர் நாயகம்
தேசிய பொறியியல் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிலையம்

அவதானிப்பாளர்
**திரு எஸ்.எம். பிரியந்த**
கணக்காய்வு அத்தியட்சகர்
கணக்காய்வாளர் அதிபதியின் திணைக்களம்

அவதானிப்பாளர்
**திரு எல்.என்.டீ. குமாரசிறி**
பிரதான உள்ளகக் கணக்காய்வாளர்
சுற்றாடல் மற்றும் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி அமைச்சு

**எமது பதவியணி பற்றிய விபரம் – 2014**

ஒப்பீட்டளவில் எமது நிறுவனம் மொத்தம் 105 ஊழியர்களைக் கொண்டுள்ள வளர்ந்து வரும் இளம் அமைப்பாகும். எமது பதவியணி பற்றிய விபரம் கீழே தரப்பட்டுள்ளது.



# செயலாற்றுகை அறிக்கை



**இலங்கை நிலைபெறுதகு வலுஅதிகாரசபையின் (இ.நி.வ.அ.ச.) செயலாற்றுகை**

இலங்கையின் தேசியசக்திக் கொள்கைகளும் திறமுறைகளும் தேசியமற்றும் தனியாள் ஆகிய இரண்டு. நோக்கங்களிலிருந்தும் வருகின்ற சக்திப்பாதுகாப்பை வலிமையாக வலியுறுத்துகின்றன. இந்தக்கொள்கை எல்லா நேரங்களிலும் சகலபிரஜைகளுக்கும் நம்பத்தகுந்த, சுமக்கக்கூடிய விலையில் தூயசக்தியைக் கிடைக்கச்செய்யும் ஒரு சூழலை ஏற்படுத்த எதிர்பார்க்கின்றது.
இலங்கை நிலைபெறுதகு வலுஅதிகாரசபை இ.நி.வ.அ.ச.) அரசாங்கத்தின் முக்கிய நிறுவனமாகும்.

இது நாட்டில் அனைத்து வகையான மீளப் புதுப்பிக்கத் தகுசக்திகளின் அதிகளவில் பிரயோகத்தையும் நிலைபெறுதகு பாவனையையும் ஊக்குவிக்கின்றது. இலங்கையின் சக்தித்துறை தற்பொழுது குறிப்பாக அனல்சக்தி உற்பத்தி நிமித்தம் இறக்குமதி செய்யும் கனிய எண்ணெய்களில் அதிகளவு தங்கியிருக்கின்ற காரணத்தால் சுமக்கக்கூடிய விலையில் முழுநாட்டிற் கும் இடையறாத மின்சார விநியோகத்தை வழங்கமுடியாமை மற்றும் கடுமையான பொருளாதாரத் தாக்கம் என்பன தொடர்பான பல சவால்களை எதிர்நோக்கிவருகின்றது. இந்தநிலையை த்தவிர்த்துக். கொள்ளும் பொருட்டு அரசாங்கம் பின்வரும் திறமுறைகளை த்திட்டமிட்டுள்ளது.

- இறக்குமதி செய்யப்படும் கனியஎண்ணெய்களுக்குப் பிரதியீடாக 2020 ஆம் ஆண்டளவில் புதியமீளப்புதுப்பிக்கத் தகுசக்திமூலங்களைப் பயன்படுத்தி20%க்றிட்மின்சார உற்பத்தி இலக்கை அடைதல்.
- சக்திப்பாதுகாப்பு அளவீட்டு முறைகளை நடைமுறைப்படுத்துவதனூடாக 2020 ஆம் ஆண்டளவில் மொத்தசக்தி நுகர்வில்10% வீதத்தைக் குறைத்தல்.

**2014 – 2015 ஆம் ஆண்டுகளின் போது இந்தத் திறமுறைத்திட்டங்களை அடையும் நிமித்தம் இ.நி.வ.அ.ச. எடுத்த நடவடிக்கைகள் பற்றிய விபரங்கள் கீழே சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன.**

**சுருக்கம்:**

- 191.93மெ.வொ. புதிய மீளப்புதுப்பிக்கத்தகு மொத்த சக்தி உற்பத்திக் கொள்-திறனைக் கருத்திற்கொண்டு 91 எண்ணிக்கையான மீளப்புதுப்பிக்கத்தகு சக்திக் கருத்திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

- எதிர்காலத்தில் அதாவது 2016 ஆம் ஆண்டளவில் புதிய மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி வளங்களிலிருந்து (பு.மீ.பு.ச.) 10% மின்னுற்பத்தியை அடையும் கொள்கை இலக்கு 2014 ஆம் ஆண்டில் அடையப்பட்டது.

- அம்பாந்தோட்டை சூரிய சக்திப் பேட்டையிலிருந்து 1354 மெ.வொ.ம. (28 LKRM) மொத்த மின்னுற்பத்தியையும் இந்துரான சிறிய நீர்வலு மின்னுற்பத்திப் பொறித் தொகுதியிலிருந்து மொத்தம் 182 மெ.வொ.ம. (2.9 LKRM) மின்னுற்பத்தியையும் உற்பத்தி செய்தல்.

- கைத்தொழில் மற்றும் வர்த்தகம் ஆகிய துறைகளில் சக்தி வினைத்திறன் சார்ந்த செயற்பாடுகளைச் செயற்படுத்துவதனூடாக 97.4GWh மின்சாரத்தைச் சேமித்தல்.

- 11 மில்லியன் லீற்றர் டீசலையும், 8 மில்லியன் லீற்றர் உலை எண்ணெய்யையும், 0.2 மில்லியன் கிலோகிராம் எரிவிறகுகளையும் சேமித்தல்.

- சக்திப் பிரதேசங்களைப் பிரகடனப்படுத்துவது தொடர்பான புதிய ஒழுங்குவிதிகள் வர்த்தமானியில் (2014 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17 ஆம் திகதிய 1858/2 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி) பிரசுரிக்கப்பட்டமை.

- நியம சக்திக் கொள்வனவு ஒப்பந்தத்தின் கீழ் (நி.ச.கொ.ஒ.) மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி வரிக் கட்டணத்திற்கான பாராளுமன்றக் கட்டளை பெறப்பட்டமை.

- சூரிய சக்தி வள வரைபடம் (சூரிய சக்தி தொடர்பான தேசப்படம்) தயாரித்தல் பணி நிறைவு செய்யப்பட்டுள்ளது.

- கேகாலை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் நீர்வலு சக்தி வளங்கள் பற்றிய மதிப்பீடு நிறைவு செய்யப்பட்டது.

- CFL மின்குமிழ்களுக்கான சக்தி முத்திரையிடல் நிகழ்ச்சித்திட்டம் வெற்றிகரமாக செயற்படுகின்றது. நட்சத்திரக் கணிப்பீடு பற்றிய நியமங்கள் தற்பொழுது மீளாய்வு செய்யப்பட்டு வருகின்றன.

- குளிர்சாதனப் பெட்டிகளை பரிசீலிக்கும் வசதி NERD என்ற நிலையத்தில் தாபிக்கப் பட்டது. கூரை மின்விசிறிகளை பரிசீலிக்கும் ஆய்வுகூடம் ஒன்றையும் மற்றும் மின்விளக்குகளை பரிசீலிக்கும் ஆய்வுகூடம் ஒன்றையும் தாபிப்பதற்கான ஒழுங்கு மேற்கொள்ளப்பட்டது.

முன்னேற்றம் பற்றிய சுருக்க விபரம் (2014 சனவரி முதல் 2014 நவம்பர் வரை)

| | *மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி அபிவிருத்தி(REACT இன் கீழ்)* |
|---|---|
| 1 | **வள ஒதுக்கீடும் அபிவிருத்தி சார்ந்த செயற்பாடுகளும்**<br>இ.நி.வ.அ.ச. மீ.ச. சுதேசிய சக்தி வளங்களின் அபிவிருத்தியைத் துரிதப்படுத்தும் முகமாக ஒன்-க்றிட் மீளப்புதுப்பிக்கத்தகு கருத்திட்டங்களின் நிமித்தம் வர்த்தக அளவிலான கருத்திட்டங்களுக்கு சக்தி அனுமதிப்பத்திரங்களையும் (ச.அ.) மற்றும் தற்காலிக அங்கீகாரங்களையும் (த.அ.) வழங்குவது தொடர்பான பொறுப்புப் பணியை நிறைவேற்றி வருகின்றது.<br><br>✓ **வழங்கிய தற்காலிக அங்கீகாரங்கள் (த.அ.)**<br>நீர்வலு- எண்ணிக்கை42 (46.44 மெ.வொ.)<br>உயிரணுத்திணிவுச் சக்தி - எண்ணிக்கை 7 (41.24 மெ.வொ.)<br>கடல் அலை சக்தி- எண்ணிக்கை 1 (4 மெ.வொ.)<br>✓ **வழங்கிய சக்தி அனுமதிப்பத்திரங்கள் (ச.அ.)**<br>நீர்வலு -எண்ணிக்கை26 (35.76 மெ.வொ.)<br>உயிரணுத்திணிவுச் சக்தி-எண்ணிக்கை3 (2.79மெ.வொ.)<br>சூரிய சக்தி -எண்ணிக்கை5 (50 மெ.வொ.)<br>✓ **ஆரம்பித்த கருத்திட்டங்கள்**<br>நீர்வலு -எண்ணிக்கை6 (8.7மெ.வொ.)<br>உயிரணுத்திணிவுச் சக்தி -எண்ணிக்கை2 (7 மெ.வொ.)<br>காற்றுமூல சக்தி -எண்ணிக்கை1 (10மெ.வொ.)<br><br>மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி வளத்தைப் பயன்படுத்தி 2014 ஆம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட மொத்த மின்சாரம் 4885.8 GWh ஆகும்<br>இ.நி.வ.அ.ச. மின்னுற்பத்திப் பொறித்தொகுதிகளை இயக்கியதன் மூலம் மேலும் சூரிய சக்தியினால் 1,354,878 kWh மின்சாரமும் மற்றும் நீர்வலுவினால் 182,548 kWh மின்சாரமும் உற்பத்தி செய்யப்பட்டது. |

| 2 | **மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி வள மதிப்பீடு**<br>இ.நி.வ.அ.ச. வள வரைபடத்தினூடாக இலங்கைக்கு மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி வளங்கள் தொடர்பான பதிவேடு ஒன்றைத் தயாரித்து வருகின்றது. இதன் ஆரம்ப கட்டத்தில் சூரிய சக்தி, காற்றுமூல சக்தி, சிறிய நீர்வலு மற்றும் உயிரணுத்திணிவு சக்தி முதலிய சக்தி வளங்களுக்கு முன்னுரிமையளிக்கப்படும்.<br>✓ முழு நாட்டையும் உள்ளடக்கிய சூரிய சக்தி வளத் தேசப்படம் பிரசுரிக்கப் பட்டது.<br>✓ அம்பாந்தோட்டை மற்றும் கிளிநொச்சி ஆகிய சூரிய சக்தி அளவீட்டு நிலையங்களிலிருந்து தரவுகளை சேகரித்தல், சுவட்டில் பாதுகாத்தல் மற்றும் தரவுகளைப் பகுப்பாய்வு செய்தல் ஆகிய பணிகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.<br>✓ கேகாலை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் நீர்வலு சக்தி வளங்களின் சாத்தியம் பற்றிய மதிப்பீடு நிறைவு செய்யப்பட்டது.<br>✓ தேசிய காற்று சக்தி தொடர்பான குறிப்புகளின் வலையமைப்புக் கோபுரம் (WRNM)தாபிக்கப்பட்டது. காற்று சக்தி பற்றிய தரவுகள் தொடர்ச்சியாக சேகரிக்கப்பட்டு வருகின்றன.<br>✓ ஆண்டு ஒன்றுக்கு ரூ. 250,000/- விலையில் இ.நி.வ.அ.ச. சபையிடமிருந்து ஒரு அமைவிடத்திற்காக காற்று/ சூரிய சக்தி தொடர்பான தரவுகளை சக்தி உற்பத்தித் தரப்புகளினால் பெற்றுக்கொள்ள முடியும்.<br>✓ கைத்தொழில் துறையிலும் மற்றும் வீட்டுத் துறையிலும் உயிரணுத்திணிவு சக்தியின் நுகர்வைக் கண்டறியும் பொருட்டு மதிப்பீடுகள் மேற்கொள்ளப் பட்டிருந்தன. பதிவுசெய்த கருத்திட்டங்களின் உயிரணுத்திணிவுச் சக்தி விநியோகப் பிரதேசங்கள் தொடர்பான வரைபடத்தைத் தயாரிக்கும் பணி நிறைவு செய்யப்பட்டிருந்தது.<br>✓ வளங்கள் பற்றிய மதிப்பீட்டிற்கான 'காற்றுத்தேசப்படப் பகுப்பாய்வு மற்றும் பிரயோக நிகழ்ச்சித்திட்டம்'(**WAsP**)என்ற நிகழ்ச்சித்திட்டத்தைப் பயன்படுத்தி காற்று சக்தி வள மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.<br>✓ 5 காற்று அளவீட்டுக் கோபுர ஸ்தலங்களின் தரவுகளை செல்லுபடியாக்கல் மற்றும் வளங்கள் தொடர்பான புள்ளிவிபரங்களைத் தொகுத்தல் ஆகிய பணிகள் நிறைவு செய்யப்பட்டன. 5 பயனுள்ள அறிக்கைகள் தொகுக்கப் பட்டன.<br>✓ ஆ.அ.வ. நிதியளித்த ஆய்வொன்றின் மூலம் மன்னார் பிரதேசத்திலுள்ள காற்றுமூல சக்தி சாத்தியம் பற்றிய மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இங்கு 375 மெ.வொ. மின்சார சாத்தியம் இருக்க வேண்டும் என மதிப்பிடப் பட்டுள்ளது. காற்று சக்திப் பேட்டை எண்ணக்கருவொன்றைத் தாபிக்கும் விடயம் பேச்சுவார்த்தை மட்டத்திலுள்ளது.<br>✓ ஆ.அ.வ. குவன்டம் லீப் WRA கருத்திட்டத்தின் கீழ் வட பிராந்தியத்தில் 3 புதிய காற்று அளவீட்டுக் கோபுரங்கள் நிறுவப்பட்டு வருகின்றன. இந்தக் கருத்திட்டம் நிறுவப்பட்டு 2015 ஆம் ஆண்டு சனவரி மாதத்தில் வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. |
|---|---|







*இலங்கை சூரிய சக்தி வளத் தேசப்படம்*

*சபரகமுவ மாகாணத்தின் நீர்வலு வள வரைபடம்*







*காற்று அளவீட்டுக் கோரங்களின் அமைவிடங்கள்*

*உயிரணுத்திணிவுச் சக்தி விநியோகத்தைக் கொண்டு உயிரணுத்திணிவுச் சக்தியை நுகரும் கைத்தொழில்களின் வரைபடம்*




தாவரமூல சக்திக் கருத்திட்டங்களின் உயிரணுத்திணிவுச் சக்தி விநியோகம்




'விவசாயக் கழிப்பொருட்கள் மூல சக்தி உற்பத்திக் கருத்திட்டங்களின் உயிரணுத்திணிவுச் சக்தி விநியோகம்




உயிரணுத்திணிவுச் சக்தி விநியோகப் பிரதேசங்கள் அடங்கிய சுண்ணாம்புக் கைத்தொழில் கொத்தணியின் உயிரணுத்திணிவுச் சக்தி நுகர்வு




விவசாயக் கழிவுகள் சக்தி உற்பத்திக் கருத்திட்ட உயிரணுத்திணிவு விநியோகப் பிரதேசங்கள்




*காற்று சக்தித் தரவுப் பகுப்பாய்வு*



*மன்னார் பிராந்திய காற்று வள வரைபடம்*

3 **மீளப்புதுப்பிக்கத்தகு சக்திச் சேவைகள்**

இ.நி.வ.அ.ச. மின்சாரத்திற்கான RE சார்ந்த தீர்வுகளை அறிமுகப்படுத்துதல், RE சார்ந்த சக்திப் பிரயோகங்களையும் தொழில்நுட்பப் பரம்பலையும் ஊக்குவித்தல் போன்ற வித்தியாசமான மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி சார் சேவையை நிறைவேற்றி வருகின்றது. இத்தகைய சேவைகள் கிராமி மக்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளன.

- ✓ ஊவா மாகாணத்தில் 100 சூரிய சக்தி வீட்டு அலகுகள் நிறுவப்பட்டுள்ளன. 1200 அத்தகைய வீட்டு அலகுகளை நிறுவும் பணி நிகழ்ந்து வருகின்றது.
- ✓ 10 கிராமிய நீர்வலுக் கருத்திட்டங்களின் புனர்நிர்மாணத்திற்கும் மற்றும் பராமரிப்பும் உதவிகள் வழங்கப்பட்டன.
- ✓ 133 உயிர் எரிவாயு அலகுகளின் நிறுவுகை முன்னெடுக்கப்பட்டது. இந்த முன்னெடுப்பில் 60 அலகுகளின் நிறுவுகைப் பணி நிறைவடைந்துள்ளது.
- ✓ மிரிஸ்ஸ, கந்தர, தலரம்ப ஆகிய மீன்பிடிச் சங்கங்களில் 06 உயிரணுத் திணிவுச் சக்தி உலர்த்திகள் கருத்திட்டம் செயற்படுத்தப்பட்டன. அத்துடன் நொச்சியாகமவில் சூரிய சக்தி நீர் பாம்பி நிலையமும் நிறுவப்பட்டது.
- ✓ REஐ அறிமுகப்படுத்துதல், RE மின்சாரமாக்கலின் பயன்பாட்டையும் உயிர் எரிவாயுத் தொழில்நுட்பத்தின் பாவனையையும் ஊக்குவித்தல் என்பன தொடர்பில்38 விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப் பட்டன.



*ஓப்.க்றிட் சூரிய சக்தி முறைமைகளின் மின்சாரப் பகிர்ங்களிப்பு - மொனராகலை*



*சுனித்தியாலோக்கக் கருத்திட்டம்*

4

**நன்கொடைத் தரப்பு நிதியளித்த கருத்திட்டங்கள்**

ஆசிய அபிவிருத்தி வங்கி (ஆ.அ.வ.) நிதியளித்த இரண்டு பெரும் பாரிய REஅபிவிருத்திக் கருத்திட்டங்கள் இ.நி.வ.அ.ச. மூலம் முன்னெடுக்கப்பட்டிருந்தன. அந்தக் கருத்திட்டங்கள் இன்றும் நிகழ்ந்து வருகின்றன. இந்தக் கருத்திட்டங்கள் பின்வருமாறு:

1. கூரை மேலிட்டு சூரிய சக்தியினால் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் கருத் திட்டம் -இத்தகைய உப கருத்திட்டங்களை அபிவிருத்தி செய்வதனூடாக தேசிய க்றிட் மின்சார முறைமைக்கு 1000 கி.வொ. மின்சாரத்தை சேர்த்தல்.
2. தோட்டப் பகுதி நுண் நீர்வலு கருத்திட்டம் -1.3 மெ.வொ. மின்சாரத்தை வழங்கும் கைவிடப்பட்டுள்ள சுமார் 19 நுண் நீர்வலு கருத்திட்டங்களைப் புனரமைத்து க்றிட் மின்சார முறைமைக்கு இணைத்தல்.

மேலும், ‘நிலைபெறுதகு உயிரணுத்திணிவுச் சக்தி உற்பத்தியையும் மற்றும் நவீன உயிரணுத் திணிவுச் சக்தித் தொழில்நுட்பங்களையும் ஊக்குவித்தல்’ தலைப்பில் UNDP/GEF/FAO நிதியளித்த கருத்திட்டமும் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. கருத்திட்டத்திற்கான ஒரு பங்காளித்துவக் கருத்திட்டமும் இ.நி.வ.அ.ச. மூலம் செயற்படுத்தப்படுகின்றது. கீழ்காணும் செயற்பாடுகள் நிறைவு செய்யப்பட்டுக் காணப்பட்டன.

- ✓ உயிரணுத்திணிவுச் சக்தி விநியோக வர்த்தகத்தில் சம்பந்தப்படுகின்ற விநியோக இயக்குநர்களை இனங்காணுதல் மற்றும் முழுமையான பரந்த உயிரணுத்திணிவுச் சக்தி பற்றிய பயிற்சிக்கான பாடநெறி மொடியூலைத் தயாரித்தல்.

***சக்தி வினைத்திறன் மேம்பாடு( EnMAP இன் கீழ்)***

சக்தி முகாமைத்துவம் சார்ந்த செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதனூடாக 2014 ஆம் ஆண்டில் பின்வரும் முழுமொத்த சக்திச் சேமிப்புகளை அடைய முடிந்தது.

| செயல் | சேமிப்பு | |
|---|---|---|
| | வகை | பெறுமானம் |
| 30 தேயிலைத் தொழிற்சாலைகளில் சக்தி முகாமைத்துவம் சார்ந்த செயற்பாடுகளை மேற்கொள்ளல் | மின்சாரம் | 400 MWh |
| 60 நிறுவனங்களில் சக்தி முகாமையாளர்களை இயங்கச் செய்தல் | மின்சாரம் | 15 GWh |
| SLNEEA விருது வழங்கும் திட்டம் | மின்சாரம் | 6 GWh |
| | டீசல் | 11 மில்லியன் லீற்றர் |
| | உலை எண்ணெய் | 8 மில்லியன் லீற்றர் |
| | எரிவிறகு | 0.2 மில்லியன் கிலோகிராம் |

இது தவிர, 2013-2014 ஆம் ஆண்டுகளில் வ/ப இலங்கை வர்த்தக முகாமைத்துவ பணியகத்தினால் மேற்கொள்ளப்பட்ட ‘தாக்கங்கள் பற்றிய மதிப்பீட்டு ஆய்வில்’ சுட்டிக்காட்டப்பட்டது போல் தேயிலை, இறப்பர், புடவை மற்றும் ஆடைகள்,

ஹோட்டல், வைத்தியசாலை போன்ற துறைகளிலும், உணவு கைத்தொழிலிலும் துறை சார்ந்த விஷேட நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்தியதனூடாக மொத்தம் 76 GWh/ஆண்டு என்ற அளவிலான மின்சார சேமிப்புக் குறிக்கோள் அடையப் பட்டது.

| துறை | சேமிப்பு (GWh/ஆண்டு) |
|---|---|
| தேயிலை | 6 |
| இறப்பர் | 13 |
| புடவை மற்றும் ஆடைகள் | 26 |
| ஹோட்டல் | 17 |
| உணவுக் கைத்தொழில் | 9 |
| வைத்தியசாலைகள் | 5 |
| **மொத்தம்** | **76** |

1 **சக்தி முகாமைத்துவ முறைமைகளின் தாபிப்பு**

இ.நி.வ.அ.ச. நிறுவனங்களுக்கு ISO50001சக்தி முகாமைத்துவ முறைமைகளை அறிமுகப்படுத்தி வர்த்தகம், கைத்தொழில், வீடு சார்ந்த துறைகளில் மின்சாரத்தை சேமிப்பதற்கு உதவுகின்றது.

- ✓ 180 சக்தி முகாமையாளர்களும் மற்றும் 13 உத்தரவாதம் பெற்ற சக்தி மதிப்பாய்வாளர்களும் நியமிக்கப்பட்டனர்.
- ✓ சக்தி முகாமையாளர்களுக்கான 3 பயிற்சி நிலையங்களும் மற்றும் சக்தி மதிப்பாய்வாளர்களுக்கான 1 பயிற்சி நிலையமும் பதிவுசெய்யப்பட்டன.
- ✓ 5 கைத்தொழில் துறைகளுக்கான சக்தி நுகர்வு அடிப்படை வழிகாட்டல் தொடர்பான ஆவணம் வரையப்பட்டது.
- ✓ சக்தி முகாமையாளர்கள், சக்தி முகாமைத்துவ உத்தியோகத்தர்கள் விதாதா அலுவலர்கள் ஆகியோருக்காக 10 பயிற்சி/விரிவுரை நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன.
- ✓ சக்தி முகாமைத்துவ எண்ணக்கருவை அறிமுகப்படுத்தும் நிமித்தம் முன்-பள்ளிக்கூட ஆசிரியைகள், சாரணர்கள் பொதுமக்கள் ஆகியோருக்காக 7 வேலைரங்குகள்/கருத்தரங்குகள் நடத்தப்பட்டன.
- ✓ தேயிலை ஆராய்ச்சி நிறுவகத்தின் (தே.ஆ.நி.) கூட்டொத்துழைப்பில் 60 தேயிலைத் தொழிற்சாலைகளின் பங்குபற்றலுடன் சக்திப் பாவனையின் வினைத்திறனை மேம்படுத்துவதற்கு அதிகளவான நிகழ்ச்சித்திட்டங்கள்செயற்படுத்தப்பட்டன.
- ✓ தே.ஆ.நி. முகாமைத்துவத்தினதும் நி.வ.அ.ச. சபையினதும் தொழில்நுட்ப வழிகாட்டலில் ஒரு சுய சக்தி ஊக்குவிப்பு முகாமைத்துவ முறைமை இந்தத் தேயிலைத் தொழிற்சாலைகளில் தாபிக்கப்பட்டுள்ளது.



*கொழும்பு ஜயவர்த்தன நிலையத்தில் 2014 மார்ச் 06 ஆம் திகதி நடைபெற்ற LED இணைப்பு பற்றிய வேலையரங்கு*



*மஹரகம இளைஞர் மன்ற நிலையத்தில் 2014 செப்டம்பர் 27 ஆம் திகதி நடைபெற்ற 'சக்தி வினைததிறன் சமையலறை' பற்றிய வேலையரங்கு*

2 **நியமங்களையும் ஒழுங்குவிதிகளையும் அறிமுகப்படுத்துதல்**

கைத்தொழில், வீடு, வர்த்தகம் முதலியன சார்ந்த தறைகளில் சக்தி வினைத்திறன் மேம்பாட்டை நிருவகிக்கும் வகையில் விழிப்புணர்வை ஏற்படுத்தி அதனூடாக சரியான ஒழுங்குறுத்துகைத் தலையீட்டு நடவடிக்கைகளை வகுத்தமைக்கும் நிமித்தம் இ.நி.வ.அ.ச. மூலம் பல வித்தியாசமான செயற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

- ✓ CFL மின்குமிழ்களுக்கான சக்தி முத்திரையிடல் நிகழ்ச்சித்திட்டம் வெற்றிகரமாக செயற்படுகின்றது. நட்சத்திரக் கணிப்பீடு பற்றிய நியமங்கள் தற்பொழுது மீளாய்வு செய்யப்பட்டு வருகின்றன.
- ✓ குளிர்சாதனப் பெட்டிகளை பரிசீலிப்பதற்கான வசதி ஆ.அ.வ. மானியத் திட்டங்களின் கீழ் NERD என்ற நிலையத்தில் தாபிக்கப்பட்டது.
- ✓ கூரை மின்விசிறிகளை பரிசீலிக்கும் ஆய்வுகூடம் ஒன்றையும் மற்றும் மின்விளக்குகளை பரிசீலிக்கும் ஆய்வுகூடம் ஒன்றையும் தாபிப்பதற்கான முன்னெடுப்புமேற்கொள்ளப்பட்டது.
- ✓ குழாய் ப்ளொரஷன்ட் மின்விளக்குகள் மற்றும் ப்ளொரஷன் மின்விளக்கு பலாஸ்டொர்கள் என்பன தொடர்பான ஒழுங்குவிதிகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.
- ✓ 'இலங்கையின் சக்தி வினைத்திறன் கட்டிடங்களுக்கான செயல்முறை விதிக்கோவை - 2008'திருத்தப்பட்டு வருகின்றது.
- ✓ 11 நிறுவனங்களில் 12 எண்ணிக்கையான 12 ISO50001 மதிப்பாய்வுகள் நடத்தப்பட்டன. இரண்டு நிறுவனங்களுக்கு ISO 50001சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. எஞ்சிய 09 நிறுவனங்களுக்கும் 2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் அளவில் ISO 50001 சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன.
- ✓ ISO 50001 சான்றிதழ் தொடர்பில் ஏற்கெனவே கிடைத்த முறைப்பாடுகள் தொடர்பாக 3 அவதானிப்பு மதிப்பாய்வுகள் நடத்தப்பட்டன.





*குளிர்சாதனப் பெட்டிகளைப் பரிசீலிப்பதற்காக ஜா எல NERD நிலையத்தில் நிர்மாணிக்கப்பட்ட ஆய்வுகூடம்*

3 **ஆலோசனை மற்றும் ஆறுதல்படுத்தும் சேவைகள்**

நி.வ.அ.ச. வேண்டுகோளின் பேரில் ISO 50001 மதிப்பாய்வுகளையும் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களையும் நடத்தி அதனூடாக கேள்விகளுக்குப் பதிலளித்து ஆலோசனை மற்றும் ஆறுதல்படுத்தல் சேவைகளை வழங்கியதன் மூலம் கைத்தொழில்கள், வர்த்தக, அரச துறை நிறுவனங்கள் ஆகியவற்றுக்கு அவற்றின் சக்தி சம்பந்தமான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உதவி வருகின்றது.

- ✓ கைத்தொழில்கள், வர்த்தக, அரச துறை நிறுவனங்கள் என்பவற்றுக்கு அவற்றின் சக்தி சம்பந்தமான பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு 90 ஆலோசனைகள் வழங்கப்பட்டன.
- ✓ அரச துறை நிறுவனங்களுக்கான 2 நடமாடும் சக்தி மதிப்பாய்வுகளும் 3 விரிவான சக்தி மதிப்பாய்வுகளும் நடத்தி முடிக்கப்பட்டன.
- ✓ 6 புதிய கம்பனிகள் அடங்கலாக 28 ESCO கம்பனிகள் பதிவு செய்யப்பட்டன. இற்றைப்படுத்தப்பட்டESCO பட்டியல் இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டது.
- ✓ BMICH மண்டபத்தில் 2014 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27 ஆம் திகதி மோட்டார் ரிவைன்டிங் தொடர்பான சிறந்த செயன்முறைகள் பற்றிய ஒரு பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் நடத்தப்பட்டது.



*தேயிலைத் தொழிற்சாலையைப் பார்வையிடும் இ.நி.வ.அ.ச. அலுவலர்கள்*



*இரத்தினபுரியில் தே.ஆ.நி. நடைபெற்ற முற்போக்கு மீளாய்வு நிகழ்ச்சித்திட்டம்*

**4 சாதனைகளுக்கான விருது வழங்கல்**

இ.நி.வ.அ.ச. இலங்கைத் தேசிய சக்தி வினைத்திறன் விருது (SLNEEA) வழங்கல் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதனூடாக கைத்தொழில், வர்த்தகம் ஆகிய துறைகளில் சக்தி சார்ந்த முகாமைத்துவ செயன்முறைகளை ஊக்குவிக்கின்றது.

- ✓ SLNEEA விருது வழங்கும் வைபவம் BMICH மண்டபத்தில் 2014 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25 ஆம் திகதி நடைபெற்றது. இலங்கையின் பிரதம மந்திரி அவர்கள் இதில் பிரதான அதிதியாகக் கலந்துகொண்டார்கள். தேசிய சக்தி வினைத்திறன் விருது (NEEA), மிகச் சிறந்த சக்திச் வேகைள் கம்பனிக்கான (ESCO) விருது மற்றும் குறித்த ஆண்டின் உன்னத சக்தி முகாமையாளர் விருது போன்ற விருதுகள் சக்தி சேமிப்பில் குறிப்பிடத்தக்க சாதனைகளை அடைந்த தரப்புகளுக்கு வழங்கப்பட்டன.



***SLNEEA விருது வெற்றியாளர்கள் - 2014***
*ப்ரபெஷனல் MET கன்ஸல்டென்ஸி சேவிஸெஸ் (ப்ரைவட்) லிமிற்றட், எனெர்ஜிசோல்வ் இன்டர்நெஷனல் (ப்ரைவட்) லிமிற்றட், ஓவர்சீஸ் ரியல்டி (சிலோன்) பிஎல்சி கம்பனி மற்றும் கொம்போட்வெயார் (ப்ரைவட்) லிமிற்றட் ஒப் ப்ராண்டிக்ஸ் க்ரூப் ஆகிய கம்பனிகளுக்கு தங்கச் சுடர் பதக்கங்கள் வழங்கப்பட்டன.*

**5 ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி சார்ந்த செயற்பாடுகளை மேற்கொள்ளல**

இலங்கையில் சக்தி முகாமைத்துவப் பிரிவின் அபிவிருத்தி நிமித்தம் உலகத்தின் புதிய மற்றும் நவீன தொழில்நுட்பங்களைப் பிரயோகிப்பதன் சாத்தியம் பற்றி ஆராய்வதற்கான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஒரு துவிச்சக்கர வண்டியை கொழும்புப் பிரதேசத்திற்கென தயாரித்து அறிமுகப்படுத்துவது ஒரு முக்கிய விடயமாக விளங்குகின்றது.

- ✓ முறையே கொழும்பு மற்றும் கண்டி ஆகிய நகரங்களில் 2014 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28 மற்றும் 29 ஆம் திகதிகளில் E³ST (சக்தி வினைத்திறன் மற்றும் சுற்றாடல்நேய நிலையான நிலையான போக்குவரத்து) என்ற தலைப்பில் ஒரு சர்வதேச கருத்தரங்கு நடத்தப்பட்டது.
- ✓ 04 பல்கலைக்கழகங்களின் ஈடுபாடுகளைக் கொண்டு குறித்த நிகழ்ச்சித் திட்டம் காலி, யாழ்ப்பாணம், கண்டி ஆகிய பகுதிகளுக்கும் வியாபிக்கப் பட்டது.
- ✓ 2014 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 18 ஆம் திகதி கொழும்புBMICH மண்டபத்தில் நடைபெற்ற 2014 ஆம் ஆண்டின் சிறந்த வளி நியம (BAQ) ஒன்றிணைந்த மாநாட்டிலும் நாடுகளுக்கு இடையிலான 8-வது ஆசிய பிராந்திய EST

மாநாட்டிலும் பங்குபற்றச் செய்யப்பட்டது.'நகரங்களில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான போக்குவரத்து சார் தீர்வுகளுக்கான முன்நிகழ்வு'என்றமாநாட்டிற்கு உபசரணையும் அளிக்கப்பட்டது.




*2014 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28 ஆம் திகதி கொழும்பு BMICH மண்டபத்தில் நடைபெற்ற E³STநிகழ்ச்சித்திட்டம்*




*2014 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29 ஆம் திகதி கண்டி மகாவலி ரீச் ஹோட்டலில் நடைபெற்ற E³ST நிகழ்ச்சித்திட்டம்*





**BAQ 2014 முன்நிகழ்வு- 2014 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 18 ஆம் திகதி கொழும்புBMICH மண்டபத்தில் நடைபெற்ற 'நகரங்களில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான போக்குவரத்து சார் தீர்வுகளுக்கான முன்நிகழ்வு' மாநாடு**

*நிலை பெறுதகு சக்திக் கொள்கைகளையும் மற்றும் திறமுறைத்திட்டங்களையும் தயாரித்தல் ( SEEKஇன்கீழ்)*

1 **கொள்கை சார்ந்த தலையீட்டு நடவடிக்கைகளும் நிறுவனசார் வேலைச்சட்டகங்களும்.**

இலங்கைக்கான மீளப் புதுப்பிக்கத் தகுசக்திதொடர்பான ஒருகொள்கையை த்தயாரிப்பதும். மற்றும் இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபைச் சட்டத்தைத்திருத்துவதும் இதன்கீழ் செய்யவேண்டிய முக்கிய விடயங்களாகும்.

- ✓ சுற்றடால் மற்றும் மீளப்புதுப்பிக்கத் தகுசக்திஅமைச்சினதும் மற்றும் சபைநியமித்த உபகுழுவினதும் வழிகாட்டலைக் கொண்டு இலங்கைக் கானமீளப்புதுப் பிக்கத்தகுசக்தி தொடர்பான கொள்கை வகுத்தமைக்கப்பட்டது.
- ✓ தேசிய சக்திக் கொள்கைக்கும் திறமுறைத் திட்டங்களுக்குமான உள்ளீடுகள் வழங்கப்பட் டுஅத்தகைய தேசிய சக்திக் கொள்கையும் மற்றும் திறமுறைத்திட்டங்களும் மின்வலு சக்திஅமைச்சினால் தயாரிக்கப்பட்டு வருகின்றன.
- ✓ சுற்றாடல் மற்றும் மீளப்புதுப்பிக்கத் தகுசக்தி அமைச்சு நியமித்த சட்ட உத்தியோகத்தர் குழு மூலம்இ.நி.வ.அ.ச. சட்டத்திற்கான திருத்தங்களை/ மேம்பாடுகளை மேற்கொள்வதற்கான ஒழுங்குகள் முன்னெடுக்கப்பட்டன.
- ✓ IPCC- 5-வது மதிப்பீட்டு அறிக்கையை ஒருமுகப்படுத்தி ‘காலநிலை மாற்றம்’ என்ற தலைப்பில் கருத்தரங்கு நடத்தப்பட்டது.





*REகொள்கையைத் தயரிப்பதற்கான அக்கறையுடைய தரப்பு வேலையரங்கு*





*IPCC 5-வது மதிப்பீட்டு அறிக்கை தொடர்பான காலநிலை மாற்றம் பற்றிய கருத்தரங்கு*

| | |
|---|---|
| 2 | **நிலை பெறுதகு சக்தித் தொழில்நுட்ப சுவடிகளும் சக்தித் தகவல் பகுப்பாய்வும்** |

இது, இ.நி.வ.அ.ச., கைத்தொழில் நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், ஆராய்ச்சி நிறுவகங்கள் என்பவற்றினுள் நிலைபெறுதகு சக்தி அடிப்படையிலான சிறந்த ஒருஅறிவுத் தளத்தைத் தாபிப்பதற்கான ஒரு முன்னெடுப்பாகும்.

- ✓ 2014 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21 ஆம் திகதி BMICH மண்டபத்தில் தேசிய சக்திமாநாடு நடத்தப்பட்டது. இந்த மாநாட்டில் கூடியிருந்த ஆராய்ச்சியாளர்களுக்கும், கல்விமான்களுக்கும் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் ஆராய்ச்சி மற்றும் புதிய தொழில்நுட்பத் தலையீட்டு அம்சங்கள் தொடர்பான தொழில்நுட்ப ஆவணங்கள் வழங்கப்பபட்டன.
- ✓ 2013ஆம் ஆண்டிற்கான இலங்கைத் தேசிய சக்திச்சமநிலை பற்றிய நூல் தொகுக்கப்பட்டது.
- ✓ குடிசன மதிப்பீட்டுப் புள்ளிவிபரங்கள் திணைக்களத்தின் ஒத்துழைப்பில் சக்தி சம்பந்தமான பொருளாதார சுட்டிகள் தயாரிக்கப்பட்டன.
- ✓ வீட்டுக் குடும்பக்காபன் அடிச்சுவடும் மற்றும் வீடுகளுக்கான தேறிய மாணி வாசிப்புப். பகுப்பாய்வும் தொடர்பான சுட்டிகள்/கருவிசாதனங்கள் தயாரிக்கப்பட்டன.
- ✓ நாட்டில் பெற்றோலிய எரிபொருட்களைப் பகிர்ந்தளிப்பது தொடர்பான தகவல்களைச் சேகரிப்பதற்கான ஒரு மதிப்பாய்வு தயாரிக்கப்பட்டது.




***தேசிய சக்தி மாநாடு - 2014***




***சக்திச் சமநிலை - 2013***

| | |
|---|---|
| 3 | **நிலை பெறுதகு சக்தித்தலையீட்டு அம்சங்கள் தொடர்பான நிலை ஆவணங்கள்** |

இ.நி.வ.அ.ச நிலைபெறுதகு சக்தி அபிவிருத்தி தொடர்பான தேசியநிகழ்ச்சித் திட்டத்தைச் செயற்படுத்து வதுபற்றிய புதியகருத்திட்டங்களை வகுத்தமைக்கும் பொருட்டு பல எண்ணக்கருக்களை அறிமுகப்படுத் திவருகின்றது.

- ✓ மின்சாரத்திற்கான கேள்வியைக் குறைக்கும் ஒருஅளவீடாக மேம்படுத்திய நேரம்தொடர்பான நிலை ஆவணம் தொகுக்கப்பட்டது.
- ✓ அனுப்புகை உபநிலையம் தொடர்பான நிலை ஆவணம் தயாரிக்கப்பட்டு வருகின்றது.
- ✓ கடல் நீர் சுத்திகரிப்பு மீது விஷேட கவனத்துடனான நீர்ப்பாவனையுடன் தொடர்புடைய சக்தியும் மற்றும் பொருளாதாரங்களும் பற்றி ஆராயப்பட்டு வருகின்றது.




*மேம்படுத்திய நேரத்தின் பயனாக மின்சாரப்பளு தொடர்பான வளைவரைபில் எதிர்பார்த் தமாற்றம்*

*அறிவு முகாமைத்துவம் ( SEEKஇன்கீழ்)*

1 **பாடசாலைப் பாடவிதான அபிவிருத்தி**

வலுபற்றிய ஒரு சுய உந்துகைக் கற்கைமுறைமையை ஏற்படுத்தும் நிமித்தம் ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலைப் பாடசாலைகளின் பாடவிதானங்களுக்கு வலுசம்பந்தமான அறிவையும் மற்றும் செயற்பாடுகளையும் சேர்ப்பது இதன் முக்கிய குறிக்கோளாகும்.

- ✓ தரம் 6 தரம் 11 ஆகியவற்றில் விஞ்ஞானப் பாடத்திற்கு வலுதொடர்பான அறிவும்மற்றும் செயற்பாடுகளும் சேர்க்கப்பட்டுள்ளன. இவை புதிய பாடவிதானத்தின்கீழ் 2015 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்படும்.
- ✓ ஏனைய தரங்களுக்கும் வலுச் செயற்பாடுகளை அறிமுகப்படுத்தும் விடயம் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.
- ✓ வலுவிடயம் பற்றிய புதிய பாடவிதான உள்ளடக்கம் தொடர்பாக தெளிவுபடுத்தும் விஞ்ஞானம் மற்றும்சுற்றாடல் பாடவிதான அபிவிருத்திக் குழுவுக்கான ஒரு துணை வேலையரங்கு நடத்தப்பட்டது.





***2014 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30 ஆம் திகதியும் ஒற்றோபர் மாதம் 01 ஆம் திகதியும் நடைபெற்ற இரண்டு நள் வேலையரங்கு***

2 **சக்தி தொடர்பான ஒரு கல்வி நிகழ்ச்சித்திட்டத்தைத் தயாரித்தல்**

தமது அன்றாடவாழ்க்கையில் RE இன் பயன்பாட்டையும் சக்தியையும் முகாமைசெய்யும் வகையில் ஆசிரியர்களையும் மாணவர்களையும் ஈடுபடுத்தும் நிமித்தம் பாடசாலை சக்திகுழுக்கள், சக்தித்தினக் கொண்டாட்டம் மற்றும்சக்தி நட்சத்திர போட்டி என்பன உள்ளடங்கியமு ழுமையான ஒருநிகழ்ச்சித்திட்டம்.

- ✓ 1AB மற்றும் மஹிந்தோதய பாடசாலைகளிலிருந்து 300 விண்ணப்பங்கள் கிடைத்தன இது தவிர, 120 சக்திக்குழுக்கள் தாபிக்கப்பட்டிருந்தன. மேலும் அத்தகைய குழுக்கள் தாபிக்கப்பட்டுவருகின்றன.
- ✓ 2013ஆம் ஆண்டிற்கான செயலாற்றுகை அடிப்படையில் மிகச்சிறந்த சக்திக்குழுக்கள்தேர்ந்தெடுக்கப்பட்டு அவற்றுக்கு பணப்பரிசில்களும் வழங்கப்பட்டிருந்தன.
- ✓ சக்தி கல்வி நிகழ்ச்சித்திட்டம் தொடர்பில்கல்வி அதிரிகளின் பின்னூட்டல் 2014 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15 மற்றும் 16 ஆம் திகதிகளில் நடத்தப்பட்ட ஒரு கூட்டத்தினூடாக பெறப்பட்டது. இவர்கள் வழங்கிய பின்னூட்டல், நிகழ்ச்சித் திட்டத்தின் கட்டமைப்பை மேம்படுத்துவதிலும் செயற்படுத்துகைப் பொறிமுறைகளைத் தயாரிப்பதிலும் பயன்பட்டது.
- ✓ கல்வி அமைச்சின் உதவியைக் கொண்டு ஒரு சுற்றறிக்கை தயரிக்கப்பட்டுவருகின்றது.



*சிறந்தசக் திக்குழுக் களுக்கான விருது 2013*



*கல்வி அதிகாரி களுக்கான வேலையரங்கு*

3 **நிலை பெறுதகுசக்தி வலயம் (நி.ச.வ.)-கோட்டே**

உலகப் பொருளாதார எண்ணக்கருக்களை அறிமுகப்படுத்தி செயல் வழக்கில் கொண்டு வருவதற்கும் சக்திஉள்ளுணர்வுடைய சமூகத்தை உருவாக்குவதற்கும் நி.ச.வ. தொடர்பான ஒருமுன்னோடிக் கருத்திட்டம் செயற்படுத்தப்படுகின்றது.

- ✓ கோட்டே மாநகரசபையுடன் ஒருபுரிந்துணர்வு ஒப்பந்தத்தைச் செய்து நி.ச.வ. தாபிப்புக்கான வசதி செய்யப்பட்டது.
- ✓ குறித்த வலயத்தில் சக்தி தொடர்பான ஒரு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் நடத்தப்பட்டது.10சக்திக்குழுக்கள் தாபிக்கப்பட்டன.
- ✓ கிராம உத்தி யோகத்தர் களுக்கான விழிப்புணர் வுநிகழ்ச்சித்திட்டம்

| | |
|---|---|
| | ஒன்றுநடத்தப்பட்டது.<br>✓ சகல அரசாங்கநிறு வனங்களுக்கும் தொடர்பாடல் உத்தி யோகத் தர்கள்நிய மிக்கப்பட் டுள்ளனர். சக்தி தொடர்பானம திப்பாய்வை மேற் கொள்ளும் ESCOS கம்பனிகளைத் தேர்ந் தெடுத்தல் மதிப்பீட் டுக்கட்டத்திலுள்ளது.<br> <br>***கோட்டை நி.ச.வ. பாடசாலை களுக்கானசக்தி தொடர்பான விழிப்புணர்வுநி கழ்ச்சித்திட்டம்*** |
| 4 | **ஊக்குவிப்பு நிகழ்ச்சி திட்டங்களையும் மற்றும் நன்மதிப்பை கட்டியெழுப்பும் செயற்பாடுகளையும் மேற்கொள்ளல்**<br>நிலைபெறு த குசக்தி எண்ணக்கருவை ஊக்குவிக்கும் நிமித்தம் ஏனைய தேசிய நிகழ்வுகளுக்கு இ.நி.வ.அ.ச ஒத்துழைப்பை வழங்குகின்றது.<br>✓ மீளப் புதுப்பிக்கத் தகுசக்தியையும் மற்றும் சக்திமுகாமைத்துவத்தையும் ஊக்குவிக்கும் முகமாக தேசத்திற்கும குடம் எனும் கண்காட்சியின்போது இரண்டு உள்ளகமற்றும் வெளியக கண்காட்சிக் கொட்டகைகள் காட்சிப்படுத்தப்பட்டன. பொருளாதார விவகாரங்கள் அமைச்சினால் நடத்தப்பட்ட நடமாடும் சேவைகளில் பங்குபற்றிய பொதுமக்களுக்கு 60,000துண்டுப்பிரசுரங்களும் பகிர்ந்தளிக்கப்பட்டன.<br>✓ கொழும்பு ரோயல்கல்லூரியின் பழையமாணவர் சங்கத்தினால் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த ‘எடெக்ஸ்’ கண்காட்சியின்போது பசுமை வலயத்தின்கீழ் ஒருகண்காட்சிக் கொட்டகை காட்சிப்படுத்தப்பட்டது.<br>✓ நியமநிகழ்ச்சி முகாமைத்துவ வழிகாட்டலுக்கு இணங்க அதிகாரசபைக்கு நன்மதிப்பைக்கட்டியெழுப்பும் வழிமுறையாக இ.நி.வ.அ.ச. நடத்திய சகலபெரும் நிகழ்ச்சிகளும் ஒருங்கிணைக்கப்பட்டன. |





*'தேசத்திற்குமகுடம்' எனும்கண்காட்சி* ***- 2014***

# நிதி நிலைக் கூற்று



**இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை**
**2014 திசம்பர் 31 இற்கான ஐந்தொகை**

| | குறிப்பு | 2014 | | 2013 மீளெடுத்துரைக்கப்பட்ட | |
|---|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | | |
| **நமுறையல்லாத சொத்துக்கள்** | | | | | |
| சொத்துக்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள் | 3 | 1,123,609,447 | | 1,228,166,858 | |
| நிகழும் பணிகள் | 4 | 7,624,591 | | 49,461,726 | |
| முதலீடுகள் | 5 | 71,072,018 | 1,202,306,056 | 58,528,095 | 1,336,156,679 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | | |
| வருமதிகள் | 6 | 9,548,263 | | 11,110,775 | |
| ஏனைய நடைமுறைச் சொத்துக்கள் | 7 | 34,351,481 | | 15,678,223 | |
| காசும் காசு ஒப்புரவுகளும் | 8 | 298,543,573 | 342,443,317 | 269,792,827 | 296,581,825 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | | 1,544,749,373 | | 1,632,738,504 |
| **ஒப்புரவும் பொறுப்புக்களும்** | | | | | |
| **ஒப்புரவு** | | | | | |
| திரண்ட நிதி | 9 | 10,023,944 | | 22,100,336 | |
| தேறிய மிகைகள் | | 27,270,814 | | 15,732,229 | |
| பிற்போடப்பட்ட மானியம் | 10 | 1,123,633,991 | | 1,269,922,913 | |
| இலங்கை நிலைபெறுதகு சக்தி நிதியம் | 11 | 232,345,722 | | 206,561,051 | |
| நிலைபெறுதகு சக்தி உத்தரவாத நிதியம் | | 73,321,629 | 1,466,596,100 | 69,554,046 | 1,583,870,575 |
| **நடைமுறையல்லாத பொறுப்புக்கள்** | | | | | |
| பணிக்கொடை | | 8,247,505 | 8,247,505 | 7,298,903 | 7,298,903 |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | | | |
| ஏனைய கொடுமதிகள் | 12 | 52,663,940 | | 38,395,891 | |
| குறுங்கால ஏற்பாடுகள் - கணக்காய்வுக் கட்டணங்கள் | | 1,622,636 | | 1,022,636 | |
| காணி சுவீகரித்தல் மீதான தேறிய வைப்பு | | 3,542,800 | 57,829,376 | 2,150,500 | 41,569,027 |
| **மொத்த ஒப்புரவும் பொறுப்புக்களும்** | | | 1,532,672,981 | | 1,632,738,504 |

**இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபைக்காகவும் அதன் சார்பாகவும் கையொப்பமிடப்பட்டது .**

**பணிப்பாளர் (நிதி)** **பணிப்பாளர் நாயகம்** **தலைவர்**

**இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை**
**2014 திசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று**

| | குறிப்பு | 2014<br>ரூ. | 2013<br>ரூ.<br>மீளெடுத்துரைக்கப்பட்ட |
|---|---|---|---|
| **வருமானம்** | | | |
| செயற்பாடுகளுக்கான/கருத்திட்டச் செலவுகளுக்கான மூலதன மானியம் | 13 | 33,592,173 | 4,008,039 |
| கழித்துப் பிற்போடப்பட்ட மானியம் | 14 | 166,776,750 | 168,606,531 |
| திறைசேரி மீண்டெழும் மானியம் | | 81,999,500 | 80,100,000 |
| சுற்றாடல் அமைச்சு | | 1,146,043 | |
| வருமான மானியம் - ஆ.அ.வ. - G0303 | | 4,404,284 | |
| வருமானக் கடன் ஆ.அ.வ. - 2733 SRI | | 786,109 | |
| ஏனைய வருமானம் | 15 | 117,590,567 | 106,810,919 |
| கழிக்குக: பெ.சே.வ. (VAT) | | (10,286,572) | (8,255,905) |
| **மொத்த வருமானம்** | | **396,008,855** | **351,269,583** |
| **செலவினம்** | | | |
| கருத்திட்டம்/செயற்பாடு சார்ந்த செலவுகள் | 16 | (104,921,382) | (45,268,770) |
| சம்பளங்களும் கொடுப்பனவுகளும் | 17 | (61,749,916) | (52,373,903) |
| பிரயாணச் செலவும் வாழ்க்கைப்படிக் கொடுப்பனவும் | 18 | (1,323,070) | (2,216,937) |
| வழங்கல்கள் | 19 | (9,687,374) | (7,804,909) |
| பராமரிப்பு சார்ந்த செலவுகள் | 20 | (8,015,311) | (6,454,313) |
| ஒப்பந்தம் சார்ந்த சேவைகள் | 21 | (26,994,516) | (23,117,830) |
| தேய்மானம் சார்ந்த செலவுகள் | 22 | (166,776,750) | (168,606,531) |
| ஏனைய மீண்டெழும் செலவுகள் | 23 | (5,628,271) | (3,669,374) |
| **குறித்த ஆண்டு காலப்பகுதிக்கான செலவுகள்** | | **(385,096,589)** | **(309,512,567)** |
| முன்னைய ஆண்டிற்கான சீராக்கல்கள் | | 626,320 | (190,108) |
| **மிகைகள்/(துண்டுவிழுகை)** | | **11,538,586** | **41,566,908** |

**இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை**



**2014 திசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் பற்றிய கூற்று**

| | | 2014 | | 2013 | |
|---|---|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| **இயக்கச் செயற்பாடுகளிலிருந்து வரும் காசுப்பாய்ச்சல்கள்** | | | | | |
| குறித்த ஆண்டிற்கான மிகைகள் | | 10,912,266 | | 35,853,079 | |
| முன்னைய ஆண்டிற்கான சீராக்கல்கள் | | 626,320 | | (190,107) | |
| பணிக்கொடை நிதியத்திற்கான மாற்றல் | | | | | |
| **பின்வருவனவற்றுக்கான சீராக்கல்:** | | | | | |
| சக்தி உத்தரவாத நிதியத்திற்கு மாற்றப்பட்ட தொகை | | | | - | |
| கழிக்கப்பட்ட மானியம் (கிடைத்த நிதிகள் தொடர்பில்) | | (166,776,750) | | (168,836,532) | |
| வட்டி வருமானம் | | (1,829,641) | | (3,409,193) | |
| சேவைப் பணிக்கொடை ஏற்பாடு | | 948,602 | | 1,062,527 | |
| தேய்மானம் | | 166,776,750 | | 168,836,532 | |
| | | 10,657,546 | | 33,316,306 | |
| ஏனைய நடைமுறைச் சொத்திலுள்ள (அதிகரிப்பு)/குறைவு | | (17,110,745) | | 9,162,537 | |
| நடைமுறைப் பொறுப்புக்களிலுள்ள அதிகரிப்பு/(குறைவு) | | 16,260,349 | | (8,621,761) | |
| இயக்கச்செயற்பாடுகளிலிருந்து ஈட்டிய காசு | | 9,807,150 | | 33,857,082 | |
| 3 உத்தரவாத நிதியம் | 3,025,951 | வரவு |
| தேறிய மிகைகள் | (3,025,951) | பற்று |
| 4 வருமானம் - சக்தி அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 4,714,220 | வரவு |
| சக்தி நிதியம் | (4,714,220) | பற்று |
| 5 EF இல் இருந்து வரவேண்டிய மீளளிப்பு வருமானம் | 3,907,347 | வரவு |
| சக்தி நிதியம் | (3,907,347) | பற்று |

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. ஈஎச்/ஐ/எஸ்எல்எஸ்ஈஏ /எவ்ஏ/2014

ඔබේ අංකය / உமது இல. / Your No.

දිනය / திகதி / Date 2015 திசெம்பர் 23

தலைவர்

இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபை

**இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபையின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபையின் (எஸ்எல்எஸ்ஈஏ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 (1) ஆம் பிரிவு மற்றும் 2007 இன் 35 ஆம் இலக்க இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 50(3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம், ஒரு விரிவான அறிக்கை அதிகாரசபையின் தலைவருக்கு காலக்கிரமத்தில் வழங்கப்படும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දුව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, - இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் (எஸ்எல்பிஎஸ்ஏஎஸ்)

**இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 – நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்:** நியமத்தின் 07 ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவனத்திற்கு எதிர்கால பொருளாதார நலனெதனையும் உட்பாய்ச்சாத காற்றினை அளவிடும் செயற்பாடுகளிற்கான தரவுகளையும் தகவல்களையும் சேகரிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 796,800 தொகையான செலவினம், நிலையான சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அம்பாந்தோட்டை சூரிய வெளிச்சப் பூங்கா செயற்திட்டத்திற்காக மஹாவலி அதிகாரசபையிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட 50 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட காணி விலை மதிக்கப்பட்டு மீளாய்வாண்டிலேனும் நிதிக்கூற்றுக்களிற்கு எடுத்துவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முழுமையாக சேதமடைந்திருந்த காற்றாடி கோபுரம் நிலையான சொத்துக்களிலிருந்து அகற்றப்படாதிருந்தமை காரணமாக, 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் ரூபா 2,377,000 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன.

(இ) மீளாய்வாண்டில் சக்தி நிதியத்தின் முதலீடுகளிலிருந்து மீளப்பெறப்பட்ட நிதிகளிலிருந்து மேற்கொள்ளப்பட்ட உள்ளபடியான செலவினம் ரூபா 18,157,555 ஆக இருந்தது. இருப்பினும், சக்தி நிதியத்திலிருந்து சக்தி உத்தரவாத நிதியத்திற்கு மாற்றப்பட்ட நேரொத்த தொகை ரூபா 20,435,260 ஆகக் காணப்பட்டது. ஆகையால்,

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள சக்தி உத்தரவாத நிதியத்தினதும் சக்தி நிதியத்தினதும் மீதிகள் முறையே ரூபா 2,277,705 ஆல் அதிகரித்தும் குறைத்தும் காட்டப்பட்டிருந்தன.

(ஈ) 2012 இல் பூரணப்படுத்தப்பட்டு அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்டிருந்த ரூபா 4,332,591 கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்ட நீர் வடிகாலமைப்பு முறைமை மற்றும் காவலர் கூடம் என்பன 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் காண்பிக்கப்படுவதற்குப் பதிலாக நடைபெற்றுவரும் வேலைகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தன. அதன் காரணமாக, அச் சொத்துக்களிற்குரிய மீளாய்வாண்டிற்கான ரூபா 433,260 தொகையான பெறுமானத்தேய்வுக்கு நிதிக்கூற்றுக்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) காற்றாடி கோபுரம் மற்றும் கருவிகளுடன் தொடர்புடைய ரூபா 750,375 தொகையான பிடி காசு கணக்குகளிற்கு எடுக்கப்பட்டிருக்காமையின் விளைவாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள ஆதனம், பொறி, மற்றும் உபகரணங்களின் பெறுமதி மற்றும் பிடி காசு என்பன முறையே அத்தொகையால் குறைத்துக் காட்டப்பட்டும் விடுபட்டுமிருந்தன. மேலும், அந்த விடயங்களிற்கான தொடர்புடைய பெறுமானத்தேய்வை சீராக்காமை காரணமாக அதிகாரசபையின் உரிமைத்துவம் ரூபா 643,836 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) வெளிச்சமூட்டலுக்கான பிராந்திய நிலையத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான முறையே ரூபா 8,697,719 மற்றும் 81,620,195 தொகையான செலுத்த வேண்டிய அலுவலக வாடகை மற்றும் அதன் மீதான தண்டப்பண மீதிகள் கணக்குளிற்கு எடுத்துவரப்பட்டிருக்காமையின் விளைவாக, அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள நடைமுறைப் பொறுப்புக்கள் மற்றும் மீளாய்வாண்டிற்கான மிகைகள் என்பன முறையே அத்தொகையால் குறைத்தும் அதிகரித்தும் காட்டப்பட்டிருந்தன.

இது தொடர்பில் அதிகாரசபையின் தலைவர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

மின்வலு மற்றும் சக்திவள அமைச்சின் செயலாளர் மற்றும் தேசிய பாதீட்டு பணிப்பாளர் நாயகம் ஆகியோரால் வெளியிடப்பட்ட அறிவுறுத்தல்களின் படி, மேற்படி ரூபா 8,697,719 தொகை உள்ளடங்கலாக எல்லா பொறுப்புக்களும், இலங்கை மின்சார சபையால் தீர்க்கப்பட வேண்டியிருந்தது.

### 2.2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

முறையே ரூபா 31,809,744 மற்றும் ரூபா 48,044,402 தொகையான பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகள் தொடர்பில் காலப் பகுப்பாய்வுகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அந்த மீதிகளிற்கான உறுதிப்படுத்தல்கள் கோரப்பட்டிருக்கவுமில்லை. ஆகையால், இந்த மீதிகளின் நம்பகத் தன்மையினையும் சரியான தன்மையினையும் கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் | |
| (i) 8(1) ஆம் பிரிவு | 2013 செப்தெம்பர் 30 ஆந் திகதிக்கு முன்னர் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட வேண்டிய 2014 ஆம் ஆண்டிற்கான அதிகாரசபையின் பாதீடு 2014 பெப்ரவரி 11 ஆந் திகதியன்றே அங்கீகரிக்கப்பட்டிருந்தது. |
| (ii) 14(1) ஆம் பிரிவு | 2014 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையின் வரைபு மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | |
| (i) நிதிப் பிரமாணம் 371(2)(ஆ) | ஒரு சந்தர்ப்பத்தில் ரூபா 20,000 என்ற எல்லையினை மிகைத்து 15 சந்தர்ப்பங்களில் உப கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது. |

5

(ii) நிதிப் பிரமாணம் 371(2) — 19 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த ரூபா 320,334 மொத்தமான உப கட்டுநிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கம் முடிவடைந்த பின்னர் உடனடியாக தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(இ) திறைசேரிச் சுற்றறிக்கைகள்

2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க — கணனி வன்பொருள் மற்றும் மென் பொருட்களிற்கான பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான அதிகாரசபையின் செயற்பாடுகள் முன்னைய ஆண்டிற்கான ரூபா 41,566,908 நேரொத்த மிகையுடன் ஒப்பிடுகையில் ரூபா 11,538,586 மிகையொன்றை விளைவித்திருந்தமையால், நிதி விளைவுகளில் ரூபா 30,028,322 பின்னடைவைக் காண்பித்தது. மீளாய்வாண்டில் செயற்திட்டச் செலவினம் ரூபா 59,652,612 ஆல் அதிகரித்திருந்தமையே இதற்கு பிரதான காரணமாக அமைந்திருந்தது.

### 3.2 செயற்பாட்டு வினைத்திறனின்மைகள்

பின்வரும் வினைத்திறனின்மைகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

**(அ) மூன்று மாதிரி மின்சார வாகனங்களின் அபிவிருத்தி**

2007 செப்தெம்பர் 28 ஆந் திகதியிலிருந்து 18 மாதங்களிற்குள் மூன்று மாதிரி மின்சார வாகனங்களை அபிவிருத்தி செய்வதற்காக 2009 ஆம் ஆண்டில் ரூபா 7,888,000 செலுத்தப்பட்டிருந்தது. இருப்பினும், கணக்காய்வு பரிசோதனைத் திகதியான 2015 மே 31 ஆந் திகதி வரை ஒரு வாகனத்தையேனும் பூரணப்படுத்துவதற்கு அபிவிருத்தியாளர் தவறியிருந்தார்.

**(ஆ) பத்து காற்று அளவீட்டு கம்பங்களை வழங்கி, நிர்மாணித்து, நிறுவி, வடிவமைத்தல்**

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இந்த வசதியினை கொள்வனவு செய்வதற்காக அதிகாரசபை ரூபா 23,770,000 தொகையை செலவிட்டிருந்தது. எவ்வாறாயினும், காற்று அளவீட்டு தரவுச்

சேகரித்தலின் பௌதீக செயலாற்றல் ஏறத்தாழ 51 சதவீத மட்டத்திலேயே காணப்பட்டது. ஆகவே, அதிகாரசபையின் காற்று அளவீட்டுக் கம்பங்களை தாபித்ததிலிருந்து அடைந்து கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட காற்று அளவீட்டுக் கம்பங்களை தாபிப்பதற்கான இடங்களை இனங்காணல், காற்று அளவீட்டுத் தரவு சேகரித்தல் மற்றும் தரவுகளை அறிவித்தல் போன்ற குறிக்கோள்களை அடைந்துகொள்ள முடியாதிருந்தது.

(ii) நாட்டுக்குடாவில் அமைக்கப்பட்ட கோபுரத்திற்காக ஏற்பட்ட ரூபா 1,827,125 கிரயம், கோபுரம் வேண்டப்பட்ட நியமத்தில் காணப்படாமையால் பயனற்ற செலவினமாகியிருந்தது.

(iii) கபரகல இல் கோபுரமொன்றை நிறுவுவதற்கான வேலை ஆரம்பித்தல் முற்பணம், கருவிகள் கிரயம் மற்றும் வேலைத்தள பரீட்சிப்பு என்பவற்றிற்காக ரூபா 2,377,000 தொகை 2011 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்டிருந்தது. இருப்பினும், 2015 மே 31 ஆந் திகதியிலும் கூட எவ்வித நிர்மாண செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iv) பின்வரும் காற்று அளவிடல் கம்பங்களை திருத்தி பராமரிப்பதற்கு அதிகாரசபை பொருத்தமான நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை. ஆகையால், அந்த நிலையங்களிலிருந்து திரட்டப்பட்ட தரவுகள் ஒவ்வொரு நிலையத்தின் பெயர்களுக்கும் எதிரே குறிப்பிடப்பட்டுள்ள ஆண்டிலிருந்து இடைநிறுத்தப்பட்டிருந்தன.

| அளவீட்டு நிலையம் | இறுதியாக தரவு சேகரிக்கப்பட்ட ஆண்டு |
|---|---|
| சிலாவத்துறை | 2012 |
| நானாட்டான் | 2012 |
| யால | 2011 |
| சம்பூர் | 2009 |

**(இ) சுவிச் - ஆசிய நிகழ்ச்சித்திட்டம்**

சுவிச் ஆசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கிடைத்திருந்த ரூபா 7,334,354 தொகையிலிருந்து ரூபா 3,135.202 தொகை 1994 யூன் 04 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள்

சுற்றறிக்கை மற்றும் 2000 சனவரி 11 ஆந் திகதிய பீஎவ்/பீஈ/5 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளிற்கு முரணாக 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் அதிகாரசபையின் சகல உத்தியோகத்தர்களிற்கும் தொழில்சார் படி செலுத்தப்பட்டிருந்தது.

முன்னாள் மின்வலு மற்றும் சக்திவள அமைச்சின் செயலாளர் அவரது 2012 திசெம்பர் 03 ஆந் திகதியிடப்பட்ட பீஈ/ஐஏ/22/வீஓஎல் ஆம் இலக்க கடிதத்தினால் இக் கொடுப்பனவை சகல ஊழியர்களிடமிருந்து அல்லது அதிகாரசபையின் தலைவரிடமிருந்து அறவிடுமாறு அதிகாரசபையின் தலைவருக்கு அறிவுறுத்தியிருந்தார். இருப்பினும், இந்த அதிகாரமற்ற கொடுப்பனவை அறவிடுவதற்கான அர்த்தமுள்ள நடவடிக்கைகள் கணக்காய்வுப் பரிசோதனைத் திகதியான 2015 மே 26 ஆந் திகதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 3.3 இனங்காணப்பட்ட நட்டங்கள்

முன்னாள் மின்வலு மற்றும் சக்திவள அமைச்சு 2012 திசெம்பர் 17 ஆந் திகதி அதிகாரசபையின் நிலைபெறுதகு உத்தரவாத நிதியத்திலிருந்து ரூபா 8,000,000 தொகையினை தற்காலிக கடனாக பெற்று அதனை இரண்டு ஆண்டுகளின் பின்னர் 2014 இல் செலுத்தியிருந்தது. இந்த கொடுக்கல் வாங்கலின் விளைவாக நிதியத்திற்கு ரூபா 1,398,528 சந்தர்ப்பக் கிரயம் ஏற்பட்டிருந்தது என்பது கணக்காய்வில் மதிப்பிடப்பட்டது.

### 3.4 சர்ச்சைக்குரிய கொடுக்கல்வாங்கல்கள்

இலங்கை நிலைபெறுதகு சக்தி நிதியம் மற்றும் இலங்கை நிலைபெறுதகு உத்தரவாத நிதியம் என்பவற்றின் முதலீட்டின் மீது 2008 முதல் 2013 வரையான காலத்தில் கிடைத்திருந்த ரூபா 39,618,010 தொகையான வட்டி வருமானம் தொடர்புடைய நிதியங்களிற்கு அனுப்பி வைக்கப்படாது அதிகாரசபையினால் பயன்படுத்தப்பட்டிருந்தது.

## 4. பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானங்கள் மற்றும் செலவினங்களுக்கிடையே குறிப்பிடத்தக்களவு வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது நிதி முகாமைத்துவக் கட்டுப்பாட்டின் ஒரு ஆக்கபூர்வமான கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதைக் குறிக்கின்றது.

5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்குக் காலம் அதிகாரசபையின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(இ) பெறவேண்டியவை மற்றும் செலுத்த வேண்டியவை
(ஈ) செயற்திட்டங்களின் அமுலாக்கம்
(உ) மனித வளங்கள் முகாமைத்துவம்
(ஊ) கொடுப்பனவு நடைமுறை

ஒப்பம்: எச்.எம். காமினி விஜயசிங்க
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

ශ්‍රී ලංකා සුනිත්‍ය බලශක්ති අධිකාරිය
இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபை
Sri Lanka Sustainable Energy Authority
විදුලිබල හා පුනර්ජනනීය බලශක්ති අමාත්‍යාංශයේ ව්‍යවස්ථාපිත අධිකාරියකි
மின்வலு மற்றும் மீள்புத்தாக்க சக்தி அமைச்சின் நியதிச்சட்ட அதிகாரசபை
A Statutory Authority of Ministry of Power & Renewable Energy

எனது இலக்கம் SEA/IA/CH/14/02
2015 யூலை 30

திரு ஆர்.எம்.ஜே. ரத்நாயக்க
உதவிக் கணக்காய்வாளர் அதிபதி
கணக்காய்வாளர் அதிபதியின் திணைக்களம்
இலக்கம் 306/72
பொல்துவ வீதி
பத்தரமுல்ல.

கனம் ஐயா,

**<u>இலங்கை நிலை பெறுதகு வலு அதிகார சபையின் 2014 திசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை</u>**

குறிப்பு இலக்கம்: EH/I/SLSEA/FA/2014

இது மேற்குறித்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பானது. அந்த விடயங்களுக்கான பதில்கள் இத்துடன் அனுப்பப்படுகின்றன.

பணிப்பாளர் அதிபதி
இலங்கை நிலை பெறுதகு வலு அதிகார சபை

பிரதிகள்:

01. திரு எஸ்.எம்.ஜே. பிரியந்த, கணக்காய்வு அத்தியட்சகர், கணக்காய்வாளர் அதிபதியின் திணைக்களம்
02. செயலாளர், மின்வலு மற்றும் சக்தி பற்றிய அமைச்சு
03. செயலாளர், நிதி அமைச்சு

අංක 05 ගොඩනැගිල්ල, පළමු මහල, BMICH, බෞද්ධාලෝක මාවත, කොළඹ 07, ශ්‍රී ලංකාව.
5ஆம் கட்டிடம், முதலாம் மாடி, BMICH, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 07, இலங்கை.
Block 5-1st Floor, BMICH, Bauddhaloka Mawatha, Colombo 07, Sri Lanka.

| | | | |
|---|---|---|---|
| කාර්යාලය | දුරපිටපත | විද්‍යුත් තැපෑල | වෙබ් අඩවිය |
| அலுவலகம் | தொலைநகல் | மின்னஞ்சல் | இணையம் |
| Office | Facsimile | E-mail | Web Site |
| +94(0)11 267 7445 | +94(0)11 268 2534 | info@energy.gov.lk | www.energy.gov.lk |

**2. நிதிக் கூற்றுக்கள்**

**2.2. நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1. இலங்கை அரச துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் (இ.அ.து.க.நி.) ஒவ்வாமை**

காற்றுமூல சக்தி அளவீட்டுத் தரவுகள், தகவல்கள் மற்றும் விதம் முதலியன சக்தி அபிவிருத்தித் தரப்புகளுக்கு சக்தி அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் மற்றும் அந்தத் தரப்புகளை ஊக்குவித்தல் ஆகியன தொடர்பான விடயங்களில் மிக முக்கிய பங்கை வகிக்கின்றன. ஆதலால், அது இந்த முதலீட்டிலிருந்து வருமானத்தை ஈட்டுவதற்குக் காரணமாக அமைகின்றது. ஆகையால், நிலையான சொத்துக்களின் கீழ் ஏற்பட்டது எனக் காட்டப் பட்டிருக்கின்ற மூலதன ஆகுசெலவு மிகைத்துக் கூறப்பட்ட ஒரு கூற்றல்ல.

**2.2.2. கணக்கீட்டுக் குறைபாடுகள்**

(அ) அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றதன் பின்னரே, இ.நி.வ.அ.ச. காணி சுவீகரித்தல் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளது. தற்பொழுது நாம் இலங்கை மகாவலி அதிகார சபையிலிருந்து காணி உறுதியைப் பெறவிருக்கின்றோம். தற்சமயம், காணி உறுதி மகாவலி அதிகார சபையின் எம்பிலிப்பிட்டிய கிளைக்கு பதிவின் நிமித்தம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அந்தக் காணி உறுதியைப் பெற்றவுடன், விலைம திப்பீட்டைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன், சொத்துக்கள் பதிவேட்டில் அந்தக் காணியின் உண்மையான பெறுமானம் உள்ளடக்கவும்படும். இந்த விடயம், 2013/2014 ஆம் ஆண்டிற்கான ஐந்தொகைக் கணக்கின் கீழ் ஒரு அடிக்குறிப்பாகக் குறித்துக் காட்டப்பட்டது. விலை மதிப்பீட்டின் உண்மையான தொகை அளவு கிடைத்த பின்னர் சரியான பெறுமானம் கணக்குகளில் குறித்துக் காட்டப்படும். இந்த நிலைமை பற்றி 2013 ஆம் ஆண்டிற்கான பதில்களிலும் ஏற்கெனவே தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

(ஆ) 2015 யூன் 05 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் கணக்காய்வு முகாமைத்துவக் குழு வழங்கிய அறிவுரைகளுக்கு இணங்க, இந்த நட்டம் பற்றி அறிக்கையிடுகின்ற 104 ஆம் இலக்க நி.பி.கு. விண்ணப்பமும் புலனாய்வு செய்யப்பட்ட அறிக்கையும் உரிய ஆவணங்களுடன் மின்வலு சக்தி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளன. 109 ஆம் இலக்க நி.பி.கு. இன் பிரகாரம் அங்கீகாரம் கிடைத்த பின்னர் பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(இ) சக்தி நிதியத்திலிருந்து செலவு செய்யப்பட்ட ரூ.20,435,260.00 தொகை சரியான தொகையாகும். இந்தப் புள்ளிவிபரங்கள் 2014 ஆம் ஆண்டு செலவினம் பற்றிய பேரேட்டிலிருந்து உரிய பிரிவினால் பெற்றுக் கொள்ளப்பட்டு தலைவரினால் அனுமதிக்கப்பட்டிருந்தன. புள்ளிவிபரங்களினதும் அனுமதியினதும் சுருக்கமான விபரம் பின்னிணைப்பு ‘அ’ இல் தரப்பட்டுள்ளது. மேலும், இது 2014 ஆம் ஆண்டிற்கான கணக்குகளில் அதிகார சபையின் நிதிக்குக் கிடைக்க வேண்டியது

எனவும் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2015 ஆம் ஆண்டில் மாத்திரம் நிதிகள் மாற்றப்பட்டன.

(ஈ) இந்தக் குறைபாடு இறுதிக் கணக்குகளில் 1,146,043 ரூபா எனத் திருத்தப் பட்டுள்ளது. ஒரு விநியோகத் தரப்புக்கு செலுத்தப்பட்ட 100,000.00 ரூபா தொகை முற்பணமும் இதில் அடங்குகின்றது.

(உ) ஏற்பட்ட செலவுகளுக்கான 7,531,100.00 ரூபா அடங்கிய பட்டியலில், ரூ. 4,619,540.94 தொகை மாத்திரமே 2014 ஆம் ஆண்டினது இறுதிக் கணக்குகளில் அட்டுறு செலவாகக் கணக்குக் காட்டப்பட்டுள்ளது. எஞ்சிய தொகைக்கான விபரம் பின்வருமாறு காணப்படும்.

| உறுதிச்சீட்டு இலக்கம்/கள் | குறிப்புகள் |
|---|---|
| 84 | கொடுமதி எனக் கணக்கீடு செய்யப்பட்ட தொகை - ரூ.1,662,851.60 |
| 64 | கிடைக்க வேண்டிய பெ.சே.வ. இன் (கடன்) கீழ் காட்டப்பட்டுள்ள தொகை - ரூ.1,096,987.00 |
| 177 | இந்த ரூ.83,270.88 தொகை 2015 சனவரிக்குரிய மேலதிகநேரக் கொடுப்பனவாகும் |
| 82/130/158/218/222/312/313/314 | இந்த ரூ.33,601.72 தொகை உள்ளீட்டு பெ.சே.வ. வரியே ஒழிய, ஒரு செலவு அல்ல |

(ஊ) RCL செலுத்த வேண்டிய அலுவலக வாடகை ரூ.8,697,719.00 தொகைதான், ஆனால் ரூ.90,317,915.00 தொகை அல்ல. எந்த வகை திரவநிலை நட்டங்களையும் செலுத்துவதற்கு இ.நி.வ.அ.ச. BMICH நிருவாகத்துடன் எந்த ஒரு ஒப்பந்தத்தையும் செய்துகொள்ளவில்லை. RCL, 2012 ஆம் ஆண்டு இறுதியில் BMICH இற்கு ஒப்படைக்கப்பட்ட அனைத்து சொத்துக்களையும் மற்றும் ஊழியர்களையும் உள்ளடக்கியுள்ளது. இணைக்கப்பட்டிருக்கின்ற மின்வலு சக்தி அமைச்சின் செயலாளர், மற்றும் தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஆகியோரால் வெளியிடப்பட்டுள்ள கடிதங்களின் பிரகாரம், மேற்குறித்த ரூ.8,697,719.00 அடங்கலாக அனைத்துப் பொறுப்புக்களும் இலங்கை மின்சார

சபையினால் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டியுள்ளன (பின்னிணைப்பு 'ஆ" ஐ பார்க்கவும்).

(எ) இந்தக் காசுப் புத்தக நிலுவை இறுதிக் கணக்குகளில் சீராக்கப்பட்டுள்ளது.

(ஏ) இந்தப் பிழையான கணிப்பீடு சீராக்கப்பட்டுள்ளது.

(ஐ) இந்தக் குறைபாடு சீராக்கப்பட்டுள்ளது. எனினும், அம்பாந்தோட்டை சூரிய சக்திப் பேட்டை WIP கருத்திட்டம் உரிய பிரிவினால் நிறைவு செய்யப்பட்டது என எழுத்தில் உறுதிப்படுத்தப்படவில்லை. ஆகையால், உண்மையில் நிறைவு செய்யப் பட்டது என்பதற்கான உத்தரவாதமில்லை. ஆதலால், இந்த ரூ.4,332,591.00 தொகை இன்னும் WIP கருத்திட்டத்திற்கானது என கணக்குக் காட்டப்படுகின்றது.

(ஒ) காற்று சக்திக் கோபுரங்களின் நிர்மாணப் பணிகள் 2010 ஆம் ஆண்டு ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டன. ஆகையால், ஒரு சில பிடித்துவைத்த தொகைகள் ஏற்கெனவே செலுத்தப்பட்டுள்ளன. இதனை உறுதிசெய்யாமல் ஏதாவது ஒரு பதிவிலிருந்து எம்மால் விலகிவிட முடியாது.

### 2.2.3. இணக்கல்செய்யப்படாத வித்தியாசங்கள்

(i) நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் பதியப்பட்டுள்ள தொகையில் பெ.சே.வ. அடங்குகின்றது. ஆனால், பதிவேட்டிலுள்ள உள்ளீட்டு பெ.சே.வ. உள்ளடக்கப் படவில்லை (இது பின்னர் மாத்திரம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது). மேலும், நிலையான சொத்துக்கள் புனரமைப்பு சார்ந்த செலவுகளும் நிதிக் கூற்றிலுள்ள நிலையான சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டுள்ளன. எனினும், இத்தகைய புனரமைப்பு புதிய சொத்துக்களில் மேற்கொள்ளப்படவில்லை என்பதால் அவை அனைத்தும் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் காணப்படாது. ஆகையால், வித்தியாசம் காணப்படும்.

(ii) நிர்மாணக் கட்டிடம் சம்பந்தமான கணக்குகளின் கீழுள்ள ரூ.105,624.00 தொகையானது பொதுப் பேரேட்டுக் கணக்கில் கட்டிடங்களின் புனரமைப்பு என்ற விடயத்தின் கீழ் காட்டப்பட்டுள்ளது. ஏனைய தொகைகள் சீராக்கப்பட்டுள்ளன. மேலும் நடபடிமுறையின் போது கண்டுபிடிக்கப்பட்ட ஏனைய தவறுகள்/நீக்கல்கள் என்பனவும் சீராக்கப்பட்டுள்ளன.

(iii) திறைசேரி ஆவணங்களின்படி மீண்டெழும் மானியம் ரூ.81,999,500.00 தொகையாகும், ஆனால் அது கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டது

போல் ரூ.81,998,000.00 தொகை அல்ல. ஆகையால், இரண்டு வைக மானியத் தொகைகளிலும் காணப்படும் வித்தியாசம் ரூ.3,840,000.00 தொகையாகும். இது இறுதிக் கணக்குகளில் சீராக்கப்பட்டுள்ளது (பின்னிணைப்பு ‘இ’ ஐ பார்க்கவும்).

(iv) அனுப்பிய பெ.சே.வ. இன் பிரகாரம், 2014.12.31 ஆம் திகதிக்கு செலுத்த வேண்டிய வரி ரூ.1,096,987.00 தொகையாகும் (பின்னிணைப்பு ‘ஈ’). இந்தத் தொகை 2014 ஆம் ஆண்டு திசம்பர் மாத பெ.சே.வ. வரித் தொகையுடன் சம்பந்தப்படுகின்றது. இந்த வரித் தொகை 2015 ஆம் ஆண்டு சனவரி மாதத்தில் செலுத்தப்பட்டது. ஆகையால், அனுப்பிய பெ.சே.வ. வித்தியாசம் பொதுப் பேரேட்டுக் கணக்கின்படி காணப்பட்டது ரூ.1,941,103.00 தெதாகை மாத்திரமே ஆகும். இது, இறுதிக் கணக்குகளில் பின்வருமாறு சீராக்கப்பட்டுள்ளது. குறித்த ஆண்டு காலப் பகுதியில் செலுத்தப்பபட்ட பெ.சே.வ. ரூ.1,833,058.00 (வரைவில் NBT இன் கீழுள்ள குறிப்பு 23 இல் உள்ளடக்கப்பட்ட) வெளியீட்டு பெ.சே.வ. வரியாக ரூ.10,286,572.00 தொகைக்கு சீராக்கப்பட்டது (பின்னிணைப்பு ‘உ’ ஐ பார்க்கவும்).

(v) பணிக்கொடை நிதிக் கணக்கிலிருந்த வித்தியாசம் இறுதிக் கணக்குகளில் சீராக்கப்பட்டுள்ளது. இறுதிக் கணக்குகளிலுள்ள ரூ.2,249,611.00 தொகை வித்தியாசம் சரியானதாகும். இந்த வித்தியாசத்திற்கு காரணம் ஆண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய வட்டியாகும். மீள்முதலீடுகளுடன் தொடர்புடைய கிடைக்க வேண்டிய இந்த வட்டித் தொகை உத்தரவாத நிதியக் கணக்குக்கு சரியான முறையில் வரவுவைக்கப்பட்டுள்ளது. வட்டித் தொகை கிடைக்கப் பெற்ற பின்னர் மாத்திரமே முதலீட்டுத் தொகையைப் பற்றுவைக்க முடியும். ஆகையால்தான், இந்த வித்தியாசம் காணப்படுகின்றது. கிடைக்க வேண்டிய வட்டி நிலுவைத் தொகை வருமானத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ளது.

சக்தி நிதியக் கணக்கிலுள்ள வித்தியாசமும் மற்றும் 2 சேமிப்புக் கணக்குகளிலுள்ள வித்தியாசமும் இறுதிக் கணக்குகளில் சீராக்கப்பட்டுள்ளன. 2014 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட சக்தி நிதியச் செயற்பாடுகளுக்கான சேமிப்புக் கணக்குகளில் இருந்து மாற்றக்கூடிய ரூ.20.4 மில்லியன் தொகையே இந்த வித்தியாசத்திற்குக் காரணமாகும். ஆனால், 2015 ஆம் ஆண்டில் மாத்திரம் அதிகார சபையின் நிதியத்திலிருந்து கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டன (விடயம் 2.2.2.இ ஐ பார்க்கவும்). இந்தத் தொகை கணக்குகளில், அதிகார சபையின் நிதியத்திற்கு செலுத்த வேண்டிய தொகை என குறிப்பு 12 இன் கீழ் சரியாகக் கணக்கீடு செய்யப் பட்டுள்ளது.

**2.2.4. கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

2014 ஆம் ஆண்டிற்கான கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய நிலுவைகளின் ஒரு ஆண்டுப் பகுப்பாய்வைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. அந்தப் பகுப்பாய்வு அறிக்கை கணக்காய்வாளருக்கு சமர்ப்பிக்கப் படவுள்ளது.

**2.3. சட்டங்கள், விதிமுறைகள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பன அனுசரிக்கப்படாமை**

(அ) (i) திறைசேரியிலிருந்து கிடைக்க வேண்டிய வரவுசெலவுத்திட்ட வரையறை கடந்த 2013 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திலேயே கிடைத்தது. ஆகையால் கணக்குகளைத் தயாரிப்பதிலும் மற்றும் அங்கீகாரத்தைப் பெறுவதிலும் தாமதம் நிலவியது. எனினும், இந்த விடயம் 2014 ஆம் ஆண்டு நடைபெற்ற 1-வது கூட்டத்தில் முகாமைத்துவ சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

(ii) கணக்காய்வாளர் அதிபதியின் அவதானிப்பு சரியானதாகும். வருடாந்த அறிக்கையைத் தயாரிப்பதற்கான செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

(ஆ) (i) நிலையான சொத்துக்கள் பதிவேடு 2014 ஆம் ஆண்டு முதல் மேம்படுத்தப் பட்டு வருகின்றது. இந்தப் பதிவேடு, தற்பொழுது சரியான முறையில் பேணப்படுகின்றது. கணக்காய்வு அறிக்கையின் 2.2.3. (i) ஆம் பிரிவுக்கான சீராக்கல் தேவைப்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(ii) 2014 ஆம் ஆண்டிலிருந்து கணனி மென்பாக மற்றும் கடினப் பாகப் பதிவேட்டைப் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(இ) (i) ரூ.20,000.00 தொகை உப வசக் கட்டு நிதியை விஞ்சும் விடயத்தை இ.நி.வ.அ. மேற்கொள்கின்ற செயற்பாடுகளின் தன்மையின் காரணமாக தவிர்க்க முடியாது. அதிகமான நிகழ்ச்சித்திட்டங்கள் வெளி நிலையங்களில் செயற்படுத்தப்படுகின்றன. திட்ட நிகழ்ச்சித் திட்டங்களை ரூ.20,000.00 தொகையைக் கொண்டு நிறைவு செய்ய முடியாது. ஆகையால், சில செயற்பாடுகளில், தலைவர் அத்தகைய தேவைப்பாடுகளுக்கு இணங்க ரூ.100,000.00 வரை அனுமதிப்பார்.

(ii) உப வசக்கட்டுநிதி நிலுவையை, முற்பணம் பெறப்பட்ட செயற்பாடு நிறைவு செய்யப்பட்டதன் பின்னர், உடனடியாக தீர்ப்பனவு செய்யுமாறு உரிய அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

(iii) 2.2.2. (ஆ) இல் விவரிக்கப்பட்டவாறு, பதிவழிப்பதற்கான அங்கீகாரத்தைக் கோரி உரிய ஆவணங்கள் அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இந்த அனைத்து ஆவணங்களும் பின்னிணைப்பு (ஊ) எனக் குறிக்கப்பட்டு இணைக்கப்பட்டுள்ள பதில்கள் இந்த அறிக்கையுடன் கணக்காய்வாளர் அதிபதியின் அவதானிப்புக்காக அனுப்பி வைக்கப் படுகின்றன.

## 3. நிதி சார்ந்த மீளாய்வு

### 3.1. நிதிப் பெறுபேறுகள்

கணக்காய்வாளர் அதிபதியின் அவதானிப்பு ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. எனினும், மேம்பாடுகளை மேற்கொள்வதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது.

### 3.2. இயக்கசார் வினைத்திறனின்மைகள்

**இனங்காணப்பட்ட நட்டங்கள்**

இந்த நட்டத்தை எவ்வாறு கணக்கீடு செய்யலாம் என்பதற்கான தெளிவில்லை. மேலும், நட்டத்தை மதிப்பிடும் முறையியலும் தெளிவானதல்ல. அதனை எம்மால் சரியாக மதிப்பிட முடியாது என்பதால் பெறுமானத்தைக் கோர முடியாது, ஆகையால், அந்த நட்டத்தை அமைச்சிலிருந்து கிடைக்க வேண்டிய தொகை எனக் குறிப்பிட முடியாது.

#### 3.2.1. மின்சாரத்தில் இயங்கக்கூடிய ஒரேமாதிரியான மூன்று வாகனங்கள் தயாரிப்பு

சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற்று சட்ட நடவடிக்கை முன்னெடுக்கப் பட்டது. சட்டமா அதிபர் ஒரு நடுத்தீர்ப்பு நடைமுறையை அறிமுகப்படுத்தியுள்ளார். தேவையான சில ஆவணங்களும் கோரப்பட்டன. இந்த விடயம் சட்டமா அதிபரின் C/154/14/SLSEA என்ற குறிப்புக் கடிதத்தின் மூலம் ஏற்றுக் கொள்ளப்பட்டதாக 2014 ஆம் ஆண்டு யூலை மாதம் 30 ஆம் திகதி எமக்கு அறிவிக்கப்பட்டது.

#### 3.2.2. பத்து காற்று அளவீட்டுக் கோபுரங்களின் நிர்மாணம், நிறுவுகை, திறந்துவைத்தல் மற்றும் அவற்றுக்கான பொருட்கள் விநியோகம்

(அ) இந்தக் கூற்றிலும் கூட: கருத்திற் கொள்ளப்பட்ட நான்கு கணக்காய்வுக் காலப் பகுதிக்கான (2009-2012) தரவுகளின் விகிதத்திற்குரிய கணிப்பீடு

மேற்கொள்ளப்படுகின்ற போது, காற்று அளவீட்டுத் தரவுகள் சேகரிப்பின் பௌதீக செயல்திறன் ஏறக்குறைய 51% வீத அளவில் காணப்படுவது என்பது சரியானதாகும். எனினும், உண்மையான கோபுர நிறுவுகைக்கும் அகற்றலுக்கும் (அல்லது தரவுகள் சேகரிப்பு நிறுத்தப்பட்ட) இடைப்பட்ட காலப் பகுதிக்கு மாத்திரம் கணிப்பீடு மேற்கொள்ளப்படுகின்ற போது தரவுகள் விகிதம் அதிகமாகக் காணப்படும். வடமேற்கு மற்றும் வட கிழக்குப் பிராந்தியங்களில் நிலவிய யுத்த நிலவரம் மற்றும் காணிப் பிரச்சினைகள் போன்ற சில காரணங்களினால் கோபுர நிறுவுகையில் சில தாமதங்கள் ஏற்பட்டன. இத்தகைய தாமதங்கள் இதற்குக் காரணமாகும். மேலும், குறிப்பாக கடலோரப் பகுதியில் காற்று அளவீட்டுக் கோபுரங்களினதும் சம்பந்தப்பட்ட உபகரணங்களினதும் இயக்க ஆயுட்காலம் மட்டுப்பட்டதாக அல்லது குறுகியதாக இருக்கும் என எதிர்பார்க்கப்பட்டதால், சில காற்று அளவீட்டுக் கோபுரங்களை 2 வருடங்களுக்கு அதிகமாக தொடர்ந்தும் இயங்கச் செய்ய முடியவில்லை.

எனினும், காற்று வள மதிப்பீட்டு நோக்கங்களுக்காக அரிதாகக் கிடைக்கக் கூடிய இத்தகைய அதிகமான காற்று அளவீட்டுக் கோபுரங்களுக்கான காற்றுத் தரவுகளை அதிகார சபையினால் திருப்தியான அளவில் சேகரிக்க முடிந்தது.

(ஆ) நடுக்குடாவில் நிர்மாணிக்கப்பட்ட கோபுரம், 'மன்னார் மாவட்டத்தில் காற்று மூல சக்தி அபிவிருத்திற்கான தலைமைத் திட்டமான' ஆ.அ.வ. நிகழ்ச்சித்திட்டத்திற்குரிய 80 மீற்றர் புதிய காற்று அளவீட்டுக் கோபுரத்தின் நிர்மாணத்திற்கு உதவும் நோக்கில் இந்தக் கோபுரம் அகற்றப்படுவதற்கு முன்னர் சுசுமார் இது 9 மாதங்கள் இயங்கியிருந்தது. முன்பிருந்த 50 மீற்றர் காற்று அளவீட்டுக் கோபுரம் மற்றும் சம்பந்தப்பட்ட உபகரணங்கள் (ஸ்டே வயர்கள் அடங்கலாக) ஆகியன பற்றிய விபரங்களை கணக்காய்வாளர் தலைமை அதிபதியினது திணைக்களத்தின் சோதனைக்காக சமர்ப்பிக்க முடியும்.

அதிகார சபையின் இந்தக் காற்று அளவீட்டுக் கோபுரத்தின் ஒரு வருட காலப் பகுதியில், இந்த ஸ்தலம் காற்றுமூல சக்தி அபிவிருத்திற்கான சிறந்த ஒரு ஸ்தலமாகக் காணப்பட்டது என்பதை இனங்காணக் கூடியதாக இருந்தது. ஆகையால், இந்தக் காற்று அளவீட்டுக் கோபுரம் அகற்றப்பட்டு, அந்தக் கோபுரம் அமைந்திருந்த இடம் மின்வலு சக்தி அமைச்சின் கீழ் மிகவும் பரந்த காற்று அளவீட்டுத் திட்டத்திற்கான (மேற்குறிப்பிடப்பட்ட

நிகழ்ச்சித் திட்டம்) இந்த நவீன புதிய 80 மீற்றர் காற்று அளவீட்டுக் கோபுரத்தைத் தாபிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டது.

இந்த 80 மீற்றர் காற்று அளவீட்டுக் கோபுரத்தின் தரவுகள் பிராந்திய காற்று முறைகளை இனங்காண்பதற்கான ஆ.அ.வ. ஆய்வுக்காகப் பயன்படுத்தப் பட்டுள்ளன. மன்னார் தீவுக்கும் அதனை சூழவுள்ள பிரதேசங்களுக்குமான விரிவான காற்று வள வரைபடம் ஏற்கெனவே இதே நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வின் பயனாக, பிரதேசத்தின் காற்று மூல சக்தி அபிவிருத்திக் கருத் திட்டத்தின் மொத்த உற்பத்திக் கொள்ளளவு 375 மெ.வொ. சக்தியாகும் என இனங்காணப்பட்டுள்ளது. இதன் சக்தி உற்பத்தி சாத்தியம் 100 மெ.வொ. என மதிப்பிடப்பட்டு அறிக்கையிடப் பட்டுள்ளது. இந்த சக்தி உற்பத்தி சாத்தியத்தை அடிப்படை ரீதியில் ஒரு காற்று மூல சக்திப் பேட்டை எண்ணக்கருவாக அபிவிருத்தி செய்ய முடியும். மேற்குறித்த ஆ.அ.வ. நிகழ்ச்சித் திட்டத்திற்கான செயற்படுத்தும் அதிகார சபை என்ற ரீதியில், நிலைபெறுதகு வலு அதிகார சபை இந்தப் புதிய காற்று அளவீட்டுத் தரவுகளுக்கும் அதன் முடிவுகளுக்குமான பிரவேசத்தைக் கொண்டுள்ளது. இந்தக் காற்றுத் தரவுகள் எதிர்காலத்தில் காற்று மூல சக்தி அபிவிருத்திச் செயற்பாடுகளுக்குப் பயன்படுத்தப்படும்.

(இ) இ-நெட் சொலூஷன் என்ற கம்பனியுடன் SEA/RE/WR/NRS/R8000 என்ற கேள்வி விலை மனு இலக்கத்தின் கீழ் கபரகல காற்று அளவீட்டுக் கோபுரத்தின் நிர்மாணத்திற்கும் நிறுவுகைக்கும் என செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தம் தொடர்பில் இ.நி.வ.அ. கீழ்காணும் தொகைகளை மாத்திரம் செலுத்தியிருந்தது.

| இல | விவரம் | தொகை (இ.ரூ.) |
|---|---|---|
| 01 | விரிவான நிர்மாணங்கள் பற்றிய கலந்துரையாடல், பிரேரணை தொடர்பான இறுதி உடன்பாடு, மற்றும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுதல் (25% ஊக்குவிப்பு முற்பணம்) | 416,875.00 |
| 02 | நி.வ.அ. பொறியியல் பிரதிநிதித்துவ சிபாரிசின் பிரகாரம் கோபுர உற்பத்தி சோதனையிடல் நிறைவு - 50% | 833,750.00 |
| 03 | உபகரணங்களின் பெறுமானங்கள் | 576,500.00 |

| | | |
|---|---|---|
| | இ-நெட் சொலூஷன் என்ற கம்பனிக்கு இ.நி.வ.அ. செலுத்திய மொத்தத் தொகை | 1,827,125.00 |

இந்தக் காற்று அளவீட்டுக் கோபுரமும் சம்பந்தப்பட்ட உபகரணங்களும் அதிகார சபையின் உடமையில் காணப்படுகின்றன.

(ஈ) அதிகார சபை கலமெட்டிய, சாம்பூர், பலாங்கொட மற்றும் சீதாஎலிய ஆகிய இடங்களிலுள்ள 4 காற்று அளவீட்டுக் கோபுரங்களின் பராமரிப்பு சார்ந்த பணிகளை 2014 ஆம் ஆண்டில் வெற்றிகரமாக நிறைவு செய்திருந்தது. இந்தக் கோபுரங்களின் பராமரிப்புப் பணிகள் நிறைவு செய்யப்பட்டதால் இவை (தரவுகள் சேகரித்தல்) இயங்கி வருகின்றன. சிலாவத்துறை காற்று அளவீட்டு நிலையம் பாரிய பராமரிப்புப் பணிகளின் கீழ் காணப் படுகின்றது. இந்த நிலையத்தின் பணிகள் நிறைவு செய்யப்பட்டு எதிர் காலத்தில் இயங்கச் செய்யப்படும். (அ) இல் விவரிக்கப்பட்டது போல், கடுமையான துருப்பிடித்தல் சூழலில் (கடலோப் பிரதேசம்) சில காற்று அளவீட்டுக் கோபுரங்கள் இயங்கியதால், இவற்றின் இயக்க ஆயுட்காலம் குறைவடைந்து இயங்காத நிலையிலிருந்தன. ஆதலால், யால மற்றும் நன்னதன் காற்றுக் கோபுரங்கள் இயக்கத்திலிருந்து முடிவுறுத்தப்பட்டன.

காற்று வள மதிப்பீட்டு நோக்கங்களுக்கு அரிதாகக் கிடைக்கக் கூடிய இந்த அதிகமான காற்று அளவீட்டுக் கோபுரங்களுக்கான காற்றுத் தரவுகளை அதிகார சபையில் திருப்தியான அளவில் சேகரிக்க முடிந்திருந்தது. இந்த அதிகார சபை, இந்தத் தரவுகளின் அடிப்படையில் பிராந்திய காற்று வளத் தேசப்படத்தைத் தயாரித்து வருகின்றது. மன்னார் காற்று வளத் தேசப் படத்தையும் மற்றும் அபிவிருத்தித் திட்டத்தையும் தயாரிக்கும் பணி ஏற்கெனவே நிறைவு செய்யப்பட்டுள்ளது. இந்த அதிகார சபை உடப்புவ மற்றும் முல்லிபுரம் ஆகிய காற்று அளவீட்டுக் கோபுரங்களின் தரவுகளின் அடிப்படையில் அமைந்திருக்கின்ற புத்தளம் காற்று வளத் தேசப்படம் மற்றும் வள அனுகூலம் பற்றிய ஆய்வுப் பணியை நிறைவு செய்யவுள்ளது.

மிகவும் முக்கியமாக, நாட்டில் காற்று மூல சக்தி அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் இந்தத் தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. காற்று மூல சக்தி அபிவிருத்திக் கருத் திட்டம் சார்ந்த பல செயற்பாடுகள் 2010 ஆம் ஆண்டிலிருந்து நிகழ்ந்து வருகின்றன. இன்று வரை நிறுவப்பட்ட காற்று மூல சக்தி உற்பத்தி வசதிகளின் சக்திக் கொள்ளளவு 125 மெ.வொ. என்ற அளவில் காணப்படுகின்றது. காற்று மூல சக்திக் கருத் திட்ட அபிவிருத்தித்

தரப்புகள் தமது கருத் திட்டங்கள் அபிவிருத்தி செய்யப்பட்ட நேரத்தில், இந்தக் காற்று அளவீட்டுக் கோபுரங்களின் தரவுகள் மிகவும் பயனுள்ளதாக இருந்ததைக் கண்டுள்ளன.

ஆகையால், குறித்த கருத் திட்டத்தின் மீதான செலவினம் ஏற்கெனவே செலுத்தித் தீர்க்கப்பட்டுள்ளது என அதிகார சபை நம்புகின்றது.

### 3.2.3. சுவிட்-ஏசியா நிகழ்ச்சித் திட்டம்

இது தொடர்பில் கணக்காய்வாளர் அதிபதியின் ஆலோசனை அமைச்சின் செயலாளரினால் வழங்கப்பட்ட அறிவுரைகளுக்கு அமைவாகக் காணப்பட்டது. திறைசேரியுடனும், செயலாளருடனும் குறித்த விடயம் பற்றி கலந்துரையாடுவதன் மூலம் சிநேகபூர்வமான ஒரு தீர்வுக்கு வரும் வகையிலும் அந்த ஆலோசனை அமைந்திருந்தது. அதன் அடிப்படையில், குறித்த விடயம் தொடர்பான செயற்பாடுகள் ஆராயப்பட்டு, அது பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

குறித்த விடயம் படிமுறைப்படுத்தப்பட்ட விதம் பற்றி 2012.12.05 ஆம் திகதிய ஒரு கடிதத்தினூடாக மின்வலு சக்தி அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டது. 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 24 ஆம் திகதியிடப்பட்ட ஒரு கடிதத்தின் மூலமும் திறைசேரிக்கான செயலாளரிடமிருந்து அங்கீகாரம் கோரப்பட்டது. இதனை அடுத்து, இ.நி.வ.அ. சுற்றாடல் மற்றும் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி வளங்கள் பற்றிய அமைச்சின் செயல்நோக்கின் கீழ் கொண்டுவரப்பட்டது. அதற்கிணங்க, திறைசேரிக்கான கடிதம், சுற்றாடல் மற்றும் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி வளங்கள் பற்றிய அமைச்சினூடாக அனுப்பி வைக்கப்பட்டது. திறைசேரிக்கும் மற்றும் கணக்காய்வாளர் அதிபதிக்கும் பிரதிகளுடன், அமைச்சின் செயலாளரினூடாக COPE செயலாளருக்கு நிலைமை பற்றி விளக்கமளிக்கின்ற மேலும் விரிவான ஒரு கடிதம் 2014.12.02 ஆம் திகதி அனுப்பி வைக்கப்பட்டது.

## 3.3. மனித வளங்கள் முகாமைத்துவம் (ம.வ.மு.)

ஆளணி முகாமைத்துவத்திலுள்ள முக்கியமான பிரச்சினைகளை சீராக்குவதற்கு பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. குறித்த பிரிவிலுள்ள இயக்கச் செயற்பாடு ஒழுங்காக இருக்கும் விதத்தில் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது.

## 3.4. சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல்கள்

நிலையான வைப்புக்களிலிருந்து கிடைக்கும் சில வட்டிகள் உத்தரவாத நிதியத்தில் முதலீடு செய்யப்படுகின்றன. ஒரு சில வருமான அளவு, திறைசேரியிலிருந்து

கிடைக்கின்ற குறைவான வசக் கட்டுநிதியை குறைநிரப்பு செய்யும் பொருட்டு இ.நி.வ.அ.ச. வருமானத்தில் கொள்ளப்பட்டுள்ளது.

### 3.5. அதிகாரமற்ற கொடுப்பனவுகள்

2013.07.30 ஆம் திகதிய 23/2013 ஆம் இலக்க நி.வ.அ. சபை அங்கீகாரப் பத்திரத்தின் பேரில் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. சபையினது பணிப்புரையின் பிரகாரம், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்தும் மற்றும் சம்பளங்கள் பதவியணி ஆணைக்குழுவிடமிருந்தும் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு 2013.08.29 ஆம் திகதி ஒரு கோரல் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது. 2013.12.30 ஆம் திகதி கிடைக்கப் பெற்ற மு.சே.தி. பதில் கடிதத்தின் பிரகாரம் அதிகார சபையின் தலைவர் இந்தக் கொடுப்பனவு தொடர்பில் தனது அங்கீகாரத்தை வழங்கியுள்ளார். முக்கியமாக ஊழியர்களை ஊக்குவிக்கும் நோக்கில் இந்தத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

### 3.6. தீர்ப்பனவு செய்யப்படாத வெளிநாட்டு முற்பணங்கள்

கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட இந்த முற்பண விடயங்கள் 2014 ஆம் ஆண்டு காலப் பகுதியில் தீர்ப்பனவு செய்யப்பட்டன.

## 4. பொறுப்புக்கூறும் தன்மையும் நல்லாட்சியும்

**பாதீட்டுக் கட்டுப்பாடு**

கணக்காய்வாளர் அதிபதியினால் அவதானிக்கப்பட்ட வித்தியாசங்கள் சீராக்கப் பட்டு, இறுதியாகத் திருத்தப்பட்ட கணக்குகள், சபையிடமிருந்து அங்கீகாரத்தைப் பெற்ற பின்னர் கணக்காய்வாளர் அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டன.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வாளர் அதிபதியினால் அவதானிக்கப்பட்ட வித்தியாசங்கள் அதிகளவில் கருத்திற் கொள்ளப்படுகின்றன. இந்தப் பலவீனங்களை சீராக்குவதற்கும் மற்றும் அவதானிக்கப்பட்ட பிரிவுகளிலுள்ள நிலைமைகளை முறைப்படுத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.